பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELANADU

மலர்: 19 வைகாசி 17 ஐ. ஆகிர்: 11 இதழ்: 108
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 30-5-77

# வடக்கில் போட்டியிட கம்யூ. மாவட்டக்குழுமுடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதியில் உள்ள தொகுதிகளில்அடுத்த பொதுத் தேர்தலில் அபேட்சகர்களை நிறுத்துவதென நேற்றுக்கூடிய இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ். மாவட்ட குழு தீர்மானித்துள்ளது.

ஐக்கியஇடதுசாரி முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தினது அடிப்படையிலேயே அபேட்சகர்கள் நிறுத்தப்படுவார்கள்.

கம்யூனிஸ்ட்கட்சி அபேட்சகர்கள் போட்டியிடாத தொகுதிகளிலுள்ள கட்சி அங்கத்தவர்களும், அனுதாபிகளும் தேர்தல் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையிட்டு அவர்களுக்கு நேரடியாக அறிவிக்கப்படும் என்றும் கம்யூனிஸ்ட் கட்சி யாழ். மாவட்டக்குழு செயலாளர் திரு. அ. வைத்திலிங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தேசியஇனப்பிரச்னை தொடர்பாக ஐக்கிய இடதுசாரி முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள நிர்வாகிய நாடுபூராவுக்கும் பிரதேச சுயாட்சிக் கோட்பாட்டை அங்கீகரிப்பதன் அடிப்படையில் நிர்வாகத்தை பரவலாக்கி ஜனநாயகப் படுத்தல் என்பது தேசிய இனப் பிரச்னை தொடர்பாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்பதாவது தேசிய காங்கிரஸில் தீர்மானிக்கப்பட்ட பிரதேச சுயாட்சி அமைப்பைச் அனுகிசெல்வதற்கு உகந்தவழி எனயாம். மாவட்ட குழுகருதுகின்றது. (ச)

# தேர்தல் முடியும்வரை இடமாற்றம் இல்லை!

## அமைச்சர் உத்தரவு

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க ஊழியர்களைப் பொதுத்தேர்தல் முடிவடையும்வரை இடமாற்றம் செய்ய வேண்டாம் என்று பொது நிர்வாக உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான பணிப்புரை ஒன்று சகல அரசாங்க திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்திற்குப் பின்னர் செய்யப்பட்ட சகல இடமாற்றங்களைப் பற்றிய விபரங்களையும் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்குமாறும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (இ)

## பயங்கர தீவிபத்து 200 பேர்பலி

வாஷிங்டன், மே 29

அமெரிக்காவில் நடைபெற்ற பயங்கர தீவிபத்து ஒன்றில் 200 பேர்வரை இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கிளப் ஒன்றில் திடீரென தீ பற்றியதாகவும் சம்பவ நேரம் கிளப்பினுள் 5000 [illegible] இருந்தனரென[illegible]றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தீ பரவியதும் தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயை அணைத்ததாகவும் மீட்பு வேலைகள் துரிதமாக் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்துக்கான காரணம்என்னவென்றுதெரியவில்லை. (உ)

அந்நியச் செலாவணி மோசடி

## சிவானந்தன்மீது இன்று தீர்ப்பு

கொழும்பு, ஞாயிறு

அந்நியச் செலாவணி மோசடி தொடர்பானகுற்றவியல் நீதி ஆணைக்குழு 30ம்திகதி திங்கட்கிழமை கூடும்போது [illegible] தன் மீதான தீர்ப்பை வழங்கும்.

சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு கராம்பு ஏற்றுமதி செய்ததாகவும் ஒருலட்சம் ரூபா பெறுமதியான மின்சாரப் பொருட்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்ததாக இவர்மீது குற்றம் சாட்டப்பட்டு விசாரணைகள் முடிவுற்றிருந்தன.

இப்போது தெஹ்ரானில் இருக்கும் சிவானந்தன் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை முன்னர் ஒப்புக்கொண்டது. தெரிந்ததே. (இ)

## சுழிபுரம் அஞ்சல் அலுவலகம்

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டுக்கோட்டைத் தொகுதி சுழிபுரத்தில் புதிய அஞ்சல்அலுவலக கட்டிடத்தை அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சரும், வீடமைப்பு நிர்மாண வேலை அமைச்சருமான திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

தமிழ்க் காங்கிரஸ்:

## இன்று [illegible] விசேஷ கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்காங்கிரஸ் சிரேஷ்ட உறுப்பினர்களினதும், ஸ்தாபக உறுப்பினர்களினதும் கூட்டமொன்று இன்று பிற்பகல் 2-மணிக்கு சாவகச்சேரி முன்னாள் எம். பி. திரு. வி. குமாரசாமியின் இல்லத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் தமிழ்காங்கிரஸ் எதிர்காலம்பற்றியும், தேர்தல் தொடர்பான விஷயங்கள் பற்றியும் ஆலோசிக்கப்பட விருக்கின்றது.

வடக்கில் தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணி ஆதரவுடன் போட்டியிடும் அபேட்சகளும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்.

எந்தெந்த தொகுதிகளுக்கு அபேட்சகர்களை நிறுத்துவதென்பது பற்றியும் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பதுபற்றியும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட விருக்கிறது. (கு)

## தீவிர பிரசாரம்

விஸ்வமடு, ஞாயிறு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முல்லைத்தீவு தொகுதி வேட்பாளராக போட்டியிடும் திரு. செ. மா. செல்லத்தம்பு தமது தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

விசுவமடு, உடையார்கட்டு, சுதந்திரபுரம், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் அவ்வப்பகுதி கூட்டணி இளைஞர்கள் சகிதம் சென்று அவர் ஆதரவு திரட்டி வருகிறார்.

திரு. செல்லத்தம்புவின் வேட்பாளர் கட்டுப்பணத்தை துணுக்காய் பகுதியைச் சேர்ந்த மல்லாவி இளைஞர்கள் கட்டுவதற்கு முன்வந்துள்ளார்கள். அதற்கான அனுமதியையும் திரு. செல்லத்தம்புவழங்கியுள்ளார். (உ)

# “தமிழ் ஈழம்தான் எமது இறுதிஇலட்சியம்”

## யாழ். கூட்டத்தில் ரி. சிவசிதம்பரம்

யாழ்ப்பாணம், திங்கள்

1948ம் ஆண்டுக்குப் பின் இலங்கை சுதந்திரம் பெற்ற பின் கடந்த 29 ஆண்டுகளாக தமிழ் காங்கிரஸ், தமிழரசு, மற்றும், கட்சிகள் அனைத்தும் தமிழ் மக்கள் உரிமைபெற முயற்சித்து தோல்வி கண்டு இனிமேல் தமிழர் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ முடியாது என்பதை உணர்ந்த் நாம் ‘தமிழ் ஈழ’ முடிவுக்கு, எம்மை சிங்கள இனம் கொண்டுவந்திருக்கிறது’.

யாழ் முற்றவெளியில்நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி பிரசார கூட்டத்தில் பேசிய வவுனியா முன்னாள் எம். பி ரி. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்,

திரு. ரி. சிவசிதம்பரம் தொடர்ந்து கூறியதாவது வடக்கில் சில தொகுதிகளிலே சிங்கள கட்சிகளின் ஆதரவுடன் சில தமிழர்களே போட்டியிடுகிறார்கள் இவர்களுக்கு தமிழ் மக்கள் தேர்தலில் நளலபாடம் படிப்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு தொகுதியிலும்

(8-ம் பக்கம் பார்க்க)

# நான்குபொலிசாருக்குஎதிராக மாஜி இன்ஸ்பெக்டர்வழக்கு!

யாழ்ப்பாணம், திங்கள்

நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு எதிராக மாஜி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத்தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்குத் தாக்கலாகியதையடுத்துமல்லாகம்மாவட்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசுறட்ணம் பிரஸ்தாப கான்ஸ்டபிள்கள் நால்வரையும் ஜூலை மாதம் 20-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளை அனுப்பும்படி உத்தரவு பிறப்பிப்பித்திருக்கிறார்.

மாஜி பொலிஸ் இன்ஸ்பெக்டரான திரு. குமார் மேற்படி வழக்கைத் தாக்கல்செய்து நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் சம்பவ தினத்தன்று தாம் சங்கானை பொலிஸ் நிலையம் முன்பாக உள்ள பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காக காத்து நின்றபோது பொலிஸ் நிலைய விடுதியில் இருந்து தம்மைநோக்கி கற்களும், அழுகிய பழங்களும் சிரட்டைகளும் வீசப்பட்டதாகவும கான்ஸ்டபிள்கள் நால்வருமே (எதிரிகள்) இதனைச் செய்தவரென்றும் தெரிவித்தார்.

இக்கான்ஸ்டபிள்களின் இச்செயலால் தமக்கு உடல் நோவும் அவமானமும் ஏற்பட்டதாகவும் இச்செயலை அவர்கள் செய்வதற்கு இப்பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த சில கான்ஸ்டபிள்களுக்கு எதிரான வழக்கு ஒன்றில் தாம் சாட்சியமளித்ததே காரணம் எனத்தாம் கருதுவதாகவும் திரு. குமார் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இதுபற்றித் தாம் ஏ. எஸ். பி. யிடமும் புகார் செய்துள்ளதாகவும் அவர் சாட்சியத்தில் கூறினார்.

சம்பவ நேரம் பிரஸ்தாப கான்ஸ்டபிள்கள் தம்மைநோக்கிக் கூக்குரலிட்டு கிண்டல் செய்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

இக்கான்ஸ்டபிள்களுக்கு கட்டளை அனுப்ப உத்தரவிட்டு நீதிபதி வழக்கு விசாரணையை மேற்படி திகதிவரை ஒத்திவைத்தார். (உ)

தமிழர் சுயாட்சிக் கழகம்

## மேலும் மூன்று வேட்பாளர் நியமனம்

வண்ணார்பண்ணை, ஞாயிறு

தமிழர் சுயாட்சிக்கழகம் மேலும் மூன்று வேட்பாளர்களைத் தெரிவுசெய்துள்ளது.

பருத்தித்துறைத் தொகுதிக்கு திரு. கே. எஸ். முத்துக்குமாரசாமியும், சாவகச்சேரித் தொகுதிக்கு சட்டத்தரணி சி. பொ. மயில்வாகனனும் கிளிநொச்சித் தொகுதிக்கு திரு. எம். செபஸ்தியாம்பிள்ளையும் வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே ஊர்காவற்றுறை கோப்பாய், முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திறம் திண்டுக்கல் 6 அடி 8 அங். உயரமான இரும்புப் பெட்டி (Iron safe) உடன் விற்பனைக்கு உண்டு. 2 இலாச்சிகளையும் 2 கதவுகளையும் உள்ளடக்கியது வெளியே 2 கைப் பூட்டுகளுண்டு. நல்ல நிலை, அழகிய தோற்றம். மயிலிட்டி வடக்கிலுள்ள ''யோகவாசம்'' எனும் திரு. செ. சின்னத்தம்பி அவர்களின் இல்லத்தில் பார்வையிடலாம். 6278

17 1/2 அடி நீளம் கொண்ட பிளாஸ்டிக்வள்ளம் அத்துடன் 6 HORSE EVINBROD மோட்டர் 22 வலைசகிதம் உடனடியாக விற்பனைக்கு உண்டு K. T. கார்த்திகேயன் கடற்கரை வீதி, பருத்தித்துறை. 6308

மில்க்வைற் தயாரிப்பான ''நீமியா உரம்'' சுன்னாகத்தில் கிடைக்கும். இடம்: ''அண்ணா கோப்பிக் கடை'', மத்திய சந்தை, சுன்னாகம். 6313

### CLASSES

I C M A, A C C A, Chartered Accountants of Sri Lanka November 1977 Examinations classes just commenced. Saturdays 2 to 5 p. m. Sundays 8 to 12 noon. Jaffna Education Centre 22, Ramiah Chettiar Lane, Hospital Road., Jaffna. 6297

## நீர்ப்பாசனத் திட்டங்கள்

கொழும்பு, ஞாயிறு இவ்வருடம் பல நீர்ப்பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப் படவிருக்கின்றன. இதற்காக 14 கோடியே 60 லட்சம் ரூபா செலவிடப்படும்.

## கேள்வி விளம்பரம்

### வரணிக் கிராமச் சபை

வரணிக் கிராமச்சபைத் தலைவரால் நுணாவடித் தெரு வேலைக்கான சீல் வைத்த கேள்வி விண்ணப்பங்கள் 16-6-77 காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பதிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் 14-6-77 பகல் 12 மணிக்கு முன் திருப்பிக் கோராத கேள்விப்பத்திரப் பணம் ரூபா 50/-ம் ரெண்டர் கட்டுக்காசு ரூபா 50/-ம் வரணிக் கிராமச்சபையில் கட்டியதன் பேரில் வழங்கப்படும் கேள்விப்பத்திரத்தில் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களை இச்சபையில் அறிந்துகொள்ளலாம். பத்திரப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

க. முருகேசு,
தலைவர்,
கிராமச் சபை,
வரணி.

கிராமச் சபை அலுவலகம்,
வரணி,
26-5-77. 6301

## மெல்லிசை சேவை

எலக்ரோனிக் கிற்றார் ● எலக்ரோனிக் வயலின் ● பியானோ எக்கோடியன் ● நாதஸ்வரம் ஆகிய இசைக் கருவிகளுடன் ● பொப்பிசை ● மெல்லிசை நிகழ்ச்சிகளுக்கு

ஜீ. எம். வாசகரின்

**'நவநீதா இசைக்குழுவின'ரை**

அழைத்து மகிழுங்கள்!

ஜீ. எம். வாசகர்
88, செம்மணி வீதி, நல்லூர். முத்திரைச்சந்தை, 6317

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல:- M B/517
ஆறுமுகம் தர்மலிங்கம், பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்
வழக்காளி

எதிராக

நாகேசு பாலசிங்கம், வண்ணாகுறிச்சி, சுழிபுரம். இறந்த பெரியார் நாகேசுவின் சொத்துக்களுக்கு சட்டபூர்வ பிரதிநிதி என்ற முறையில்
எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் M B/517-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு ஆனி மாதம் 20 ந் திகதி (20-6-77) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 1215/-ஐயும் மேலும் முதல் ரூபா 750/ க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10% வீதம் 6-2-76-ந் திகதியிலிருந்து 21-5-76-ந் திகதி வரைக்கும் வட்டியையும் அதன்பின்னர் முழுத் தீர்வைத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியுமான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வீதம் வட்டியையும் வழக்குச்செலவு ரூபா 609/50 சதமும் கொடுக்கப்படவேண்டியிருப்பதாலும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக்கோவிற்பற்று சுழிபுரம் இறை ''வண்ணாகலட்டி'' பரப்பு நில இலாச்சம் 9 குளி 12. இதில் வடக்குப் புறமாக அறுதிவிற்ற பரப்பு நில இலா 5 ஐந்து நீக்கி தெற்குப்புறமாக பரப்பு நில இலாச்சம் 4 நாலும் குழி 12 பன்னிரண்டும் கிணறும் எல்லை கிழக்கும் வடக்கும் பெரியார் சின்னத்தம்பியினுதனம், மேற்கு பெரியார் நாகேசுவின் ஆதனம், தெற்கு ஒழுங்கை இதடங்கலும்.

சி. செ. பாலசிங்கம்,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
9-5-77. 6304

## தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், திங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சிறுபோக நெற்பயிர்ச் செய்கையாளர்கள் உரவகை கிடைக்காததினால் பெரும் அவதிப்படுகிறார்கள். ரீ. டீ. எம். வீ 1 போன்ற உரவகைகளை இங்கு பெற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது. சீமெந்துக்கும் இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வ. மயில்வாகனம்,
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

## இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

அச்சுவேலி பத்தவேனியைச் சேர்ந்த சின்னப்பு நடராசா என்பவரின் கடைசி விருப்ப மரணசாதனஞ் சம்பந்தமானது.

வலயம்: யாழ்ப்பாணம்
இல. 227

நடராசா திருநாவுக்கரசு, பத்தவேனி, அச்சுவேலி.
மனுதார்

மற்றும்

1. நடராசா கந்தசாமி, பத்தவேனி, அச்சுவேலி.
2. நடராசா சிவபாதம், 4, அரியநாயகம் கமம், கிளிநொச்சி.
3. நடராசா சிவகுமார், 2½, பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை.
4. பொன்னுத்துரை சின்னத்தம்பியும்
5. பெண் சிவபாக்கியமும்
6. சதாசிவம் பத்மநாதனும்
7. பெண் கமலாம்பிகையும்
8. சுப்பிரமணியம் கைம்பெண் மகேஸ்வரி.

எல்லோரும் பத்தவேனி, அச்சுவேலி.
எதிர்மனுதார்கள்

1973இன் 44-ம் இலக்க நீதி நிருவாகச்சட்டத்தின் 280-ம் பிரிவின்கீழ்த் தாக்கல் செய்யப்பட்டதும் 1976-ம் ஆண்டு யூன் 23-ந் திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்திலிருக்கும் கூற்றுக்கள் முதற்றோற்றமளவில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்தியடைந்ததின் பேரில் யாழ்ப்பாண நீதி நிருவாக வலயத்தில் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளையாகிய நான் எவராவது 1976-ம் ஆண்டு ஆவணி மாதம் 11-ந் திகதியன்று அல்லது அதற்கு முன் எதிர்க்காரணங்காட்டினாலன்றி 1971-ம் ஆண்டு மாசி மாதம் 15-ந் திகதியிடப்பட்ட 130404-ம் இலக்கத்தைக் கொண்டதும் பிரசித்த நொத்தாரிஸ் ரீ. குணரத்தினத்தால் அத்தாட்சிப் படுத்தப்படுத்தப் பட்டதும் இப்போது இவ் வலுவலகத்தில் வைப்பிலிடப் பட்டதுமான மரணசாதனம் நிரூபிக்கப்பட்டிருக்கிறதென்றும் மேற்சொன்ன மனுதாரே குறித்த மரணசாதனத்தில் சொல்லப்பட்ட நிறைவேற்றுனரென்றும் மேற்படி மரணசாதனத்தின் மீதான மரணசாதன அதிகாரப்பத்திரம் சொல்லப்பட்ட மனுதாருக்கு முறைப்படி வழங்கப்படுமென்றும் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயற்பட்டு இத்தால் கட்டளையிடப்படுகின்றேன்,

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி.
6-7-76

எதிர்க்காரணம் காட்டும் திகதி 9-6-77 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை
தத்துவப்பத்திர அதிகாரி.
6295

# ''தன்மானத்தை இழக்க நாம் தயாரில்லை!''

### —ஜுனுப் சம்சுதீன்

யாழ்ப்பாணம், திங்கள் ''இந்நாட்டில் முஸ்லிம்கள் வியாபாரத்தை நோக்கமாகக் கொண்டு குடியேறினார்கள். கிழககில் 90 வீத முஸ்லிம்கள் கமச்செய்கையில் ஈடுபட்டனர். இன்று வியாபாரத்தையும், கமத்தையும்அரசுபறித்து விட்டது. இதற்காக நாம் பொறுத்துக் கொள்வோம். ஆனால் எங்கள் தன்மானம் பறிக்கப்படும்போது எப்படி பொறுத்துக்கொள்வோம்''

யாழ். முற்றவெளியில் நடந்த கூட்டணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய கல்முனை வேட்பாளர் ஜுனுப் சம்சுதீன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''இந் நாட்டில் வாழ்கின்ற 10 லட்சம் முஸ்லிம்களும் இவ்வளவு நாட்களும் அடிமைகளாகவே வாழ்ந்தோம். இந்த நிலை மாறவேண்டும்.

''கிழக்கில் முஸ்லிம்களின் காணிகள் சிங்களக்குடியேற்றத்தினால் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. அம்பாறை மாவட்டத்தில் அரசுநிலங்கள் மட்டுமன்றி தனிப்பட்ட முஸ்லிம்களின் நிலங்கள் கூட சிங்களக் குடியேற்றத்திற்காகப் பறிக்கப்படுகிறது.

''1948ம் ஆண்டில் கிழக்கில் 10.000 சிங்களவர்கள் மட்டுமே இருந்தனர். இன்று அது 1 லட்சத்து 85ஆயிரமாக அதிகரித்துவிட்டது. இந்த சிங்கள குடியேற்றம் இன்னும் 10 வருடங்கள் நீடிக்குமானால் நாம் கிழக்கு இலங்கையை இழந்து விடுவோம்.

''70ம் ஆண்டுக்குப்பின் முஸ்லிம் மக்கள் 50 இடங்களுக்கு மேல் தாக்கப்பட்டனர். புத்தளத்தில் பள்ளிவாசலில் கூடியிருந்த போது, சிங்களப்பொலிசார் 7 முஸ்லிம் இளைஞர்களை பலியெடுத்தனர். தேசிய அரசு பேரவையில் அமைச்சர், உதவி அமைச்சர் உட்பட 12 முஸ்லிம் எம். பி.க்கள் இருந்தும் இதுபற்றி கேள்வி எழுப்பவில்லை. இந்த அநியாயம் பற்றி தேசிய அரசுப் பேரவையில் கேள்வி எழுப்பிய ஒரேஒருவர் தந்தை செல்வாதான். முஸ்லிம் எம். பி. க்கள் சிங்களக்கட்சிகளில் அங்கம் வகித்துக்கொண்டிருந்ததால், இது பற்றி மூச்சுவிடவில்லை''.

### சம்பந்தர் பேச்சு

திருமலை கூட்டணி வேட்பாளர் திரு. சம்பந்தர் கூறியதாவது; ''இந்நாடுசுதந்திரமடைந்த பின் தமிழ்பேசும்மக்கள் பலமுறை ஏமாற்றப்பட்டனர். 49ம் ஆண்டில்மலைநாட்டு தமிழ்மக்களின் பிரஜா உரிமையை சிங்கள அரசு பறித்தது. அதன்பின் தமிழ்பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடந்தது. பின் தொழில், கல்வி வசதிகளை தமிழ்மக்கள் இழந்தனர்.

இந்த நிலையில் அமரர் செல்வநாயகமும், ஜி. ஜி. பொன்னம்பலமும் ஒன்று சேர்ந்து கூட்டணியை நிறுவினார்கள். எங்கள் நாட்டில் சுயமரியாதையுடன் வாழ தனித் தமிழ்நாடே தீர்வு என்ற முடிவுக்குவந்தார்கள். எங்கள் மத்தியில் சிங்களக்கட்சிகளும் போட்டியிடுகிறது. இதற்கு தமிழ்மக்கள் தகுந்தபாடம் படிப்பிக்கவேண்டும்'

47ம் ஆண்டு தேர்தலில் தமிழ்காங்கிரஸ் வெற்றிபெற்றது. இதன்பின் 52ம் ஆண்டு முதல் இன்றுவரை தமிழரசு வெற்றிபெற்று வந்துள்ளது. இத்தேர்தலில் திருமலைத் தொகுதியைப் பறிபோகவிடமாட்டோம். நிச்சயம்திருமலையில் வெற்றுபெறுவோம்''. (க)

## பிரசாரக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஊர்காவற்றுறைதேர்தல் தொகுதிகளுக்கான பிரச்சாரக் கூட்டம் இன்றுமாலை புளியங்கூடல் சந்தியில் நடைபெறும் திரு. க. நாகராசா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கூட்டணி வேட்பாளர்களும், இளைஞர் மகளிர் பேரவை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். (கெ)

## அரியாலைவெற்றி

யாழ்ப்பாணம், திங்கள் ஈச்சமடை கதிரொளி விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட 20 'ஓவர்' எறிபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 20 மேற்பட்ட கழகங்கள் கலந்து கொண்டன. இவற்றில் இறுதி சம்பியன் ஆட்டத்தில் கலந்துகொண்ட யாழ்.ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்திற்கும். அரியாலை இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கும் மிடையே நடந்த போட்டியில் அரியாலை இளைஞர் விளையாட்டுக் கழகம் ஸ்ரான்லி கழகத்தை வெற்றியீட்டுக் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது. அரியாலை இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கு ரி. தேசியநாதன் தலைமைதாங்கினார் எம். தெய்வேந்திரனும், ராஜாவும் சிறந்த துடுப்பு வீரர்களகா தெரியப்பட்டார்கள். (கா)

புதிய
சுற்றுடற் கல்விப்
பாடத்திட்டத்திற்கு
எழுதப்பெற்ற

**நாமும்**
**நமது சூழலும்**

3-ஆம் வகுப்பு

1977ஆம் ஆண்டு பதிப்பு

விலை: ரூ. 4-50

**சுன்னாகம்**
**தனலக்குமி**
புத்தகசாலை.

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம்; திங்கள் தொல்புரம் ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

பத்து நாட்கள் நடைபெறும் இவ்உற்சவத்தில் பகல் அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் தினமும் சமயப் பிரசங்கங்களும் பின்னர் அம்பாள் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார். முதலாம் திகதி புதன்கிழமை பொங்கல் உற்சவமும், தீர்த்தோற்சவமும் இடம்பெறும். வியாழக்கிழமை அம்பாள் ஊர் சுற்றுலாவுடன் உற்சவம் முடிவடையும்.

ஆலயவருடாந்தஉற்சவத்தை முன்னிட்டு தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலை இளைஞர்கள் ஆலயத்திற்கு வெள்ளைஅடித்தல், பந்தல் போடுதல், ஆலயச் சுற்றுடல் சுத்தம் செய்தல் முதலிய வேலைகளைச் சிரமதானம் மூலம் செய்து முடித்தனர். ஆலய மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு மேல் நிலையச் செயலாளர் தருமராசா தனது சொந்தச் செலவில் நிரந்தரமாக மேக்கூறி மின்வெளிச்சம் பூட்டி உதவியுள்ளார்.

# 'சர்வாதிகாரப்போக்கு இருக்காது!'

# மத்திய - மாநில உறவுபற்றி தேசாய்

## "எதிர்வரும் தேர்தல் மூலம் ஊழலை ஒழியுங்கள்"

பாட்னா, மே 29

'மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்குமிடையேஉள்ள உறவு எப்பொழுதுமே சுமுகமாகவே இருக்கும் மாநில அரசுகள்மீது எந்தவிதமான சர்வாதிகாரப் போக்கையும் மத்தியஅரசு கடைப்பிடிக்க மாட்டாது. ஆனால், மத்தியஅரசு வலுப்பெற்றிருந்தால், அதனால் அதிக நன்மைகள் கிடைப்பது மாநில அரசுகளுக்குத்தான்.'

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு- மொரார்ஜி தேசாய் நேற்று இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

'இந்தியாவில் மாற்றம் ஏற்பட்டு. மத்தியில் ஆட்சி மாற்றம் உண்டான கடந்த இரண்டு மாதங்களின் பின்னர் நாட்டின் முழுச்சூழ்நிலையே மாறிவிட்டது. சுதந்திரக் காற்று வீசுகிறது. மக்களும் உணரத் தொடங்கிவிட்டார்கள். இந்த நல்ல சூழ்நிலை. எதிர்வரும் சட்டசபைத் தேர்தல்களிலும் ஏற்பட மக்கள் சாரியாகத் தீர்ப்பளிக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்ட பிரதமர் திரு. தேசாய் 'அரசியல் சாசனத்துக்கு எதிரான நடவடிக்கைகளையும் ஜனதா அரசு மேற்கொள்ளமாட்டாது. நடைபெறவிருக்கும் ஒன்பது மாநில அரசுகளின் கலைப்பு, தேர்தல்கூட அரசு எதேச்சாதிகாரமாக எடுத்த முடிவுஅல்ல. சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு அளித்தபின்னரோ அரசாங்கம் இந்த மாநிலச் சட்டசபைகளைக் கலைத்து தேர்தல்களை நடத்த முடிவுசெய்தது' என்று விளக்கினார்.

மாநிலங்களில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், மத்திய அரசு அக்கட்சியுடன் நல்லுறவையே கொண்டிருக்கும். மாநிலங்களில் தனது கட்சிக்குச் செல்வாக்கு கிடைக்கவில்லையே என்ற காரணத்துக்காகத் தனது போக்கை மத்தியஅரசுமாற்றிக்கொள்ளாது. எதிர்வரும் தேர்தல், மாநிலங்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். லஞ்சத்தையும், ஊழலையும் ஒழிக்க மக்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பம் எதிர்வரும் மாநிலத் தேர்தல்கள் என்று நாம் கருதுகின்றோம்' என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் கூறினார்.

## இந்திரா பற்றி தேசாய்

பாட்னா, மே. 29

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய், நேற்று இங்கு நடைபெற்றபொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டபின்னர்பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில்பங்குபற்றினார். அப்போது முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பற்றி நிருபர்கள் கேட்டனர்.

"திருமதி இந்திராகாந்தி மீது அரசாங்கம், அளவுக்கதிகமான கடினப்போக்கையும் கடைப் பிடிக்கவில்லை; அளவுக்கதிகமான தாராளமனப்பான்மையையும் கைக்கொள்ளவில்லை" என்று பிரதமர் தேசாய் கூறினார்.

முன்னாள் மத்திய அமைச்சர் மிர்ஸா கொலை பற்றிய கேள்வியொன்றுக்குப் பிரதமர் பதிலளிக்கையில் தமது கணவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக திருமதி மிர்ஸாவிடமிருந்து தமக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது என்றும் இது சம்பந்தமான தேசிய விசாரணைக் கமிட்டியின் அறிக்கை கிடைத்ததும்மேற்கொண்டு என்ன செய்வது என்பது குறித்து அரசு முடிவு எடுக்கும் என்றும் கூறினார்.

### மூவருக்கு மரணதண்டனை

லண்டன், மே 29

லிபியாவுக்காக ஒற்றர்வேலை செய்தனர் என்ற சதிக்குற்றச்சாட்டின் பேரில் எகிப்திய அரசாங்கம் மூவருக்கு மரணதண்டனை அளித்தது

### அறிமுகத்திலும் தனி அழகு

யாழ்ப்பாணம், திங்.

கூட்டணி அபேட்சகர்களை தலைவர் அறிமுகம் செய்து வைத்துக்கொண்டிருந்த சமயம், மட்டக்களப்பு முன்னாள் எம். பி. திரு. சி. இராசதுரை மேடையில் ஏறியதும், மக்கள் பலத்தகரகோஷம் செய்தனர்.

அவர் பின் வரிசையில் அமரச் சென்றபோது 'முன்வரிசையில் அமருங்கள்' என மக்கள் பலத்த கோஷமிட்டனர் இதைத் தொடர்ந்து அவர் எழுந்து வந்து முன்வரிசையில், திரு. எம். சிவசிதம்பரத்திற்கு அருகில் அமர்ந்தார். அச்சமயம் மேடையில் கவிஞர் காசி ஆனந்தனும் அமர்ந்திருந்தார்.

தலைவர், திரு. இராசதுரையை அறிமுகம் செய்தபோது 'மீன்பாடும் தேன்நாடாம் கிழக்கு இலங்கையின் தலைவன்' என்று கூறினார்.

கவிஞர் காசி ஆனந்தனை அறிமுகப்படுத்தும் போது 'ஆண்டபரம்பரை மீண்டும் ஆள வழிவகுக்கும் பெரியார்' எனக்கூறினார்.

### மாநிலத் தேர்தல்: ஒரு சிறு மாற்றம்

## இம்முறை மை பூசுவது நடுவிரலில்!

சென்னை, மே. 29

எதிர்வரும் சட்டசபைத் தேர்தல்களில் வாக்களிப்பவர்களுக்கு ஆள்காட்டிவிரலுக்குப் பதிலாக நடுவிரலில் அழியாத மை பூசப்படுமென்று இந்திய பிரதம தேர்தல் ஆணையாளர் திரு. பி. சுவாமிநாதன் தெரிவித்தார்.

நடிந்துமுடிந்த லோகசபைத் தேர்தல்வாக்கெடுப்பின்போது ஆள்காட்டி விரலில் பூசப்பட்ட மை இன்னும் உலராத நிலையிலே இம்முறை நடுவிரலில் பூசப்படுகிறதென்றும் அவர் கூறினார்.

கடந்தமுறை பூசப்பட்ட மையை கிரீஸ், எண்ணை ஆகியவற்ருல் அழித்துவிட முயற்சி மேற்கொள்ளப்பட்டமையால் இம்முறை எவ்வித திராவகத்தினலும் அழிக்கமுடியாத மை பூசப்படுமென்றும் அவர் கூறினார். (இ)

### எதியோப்பிய அரசு திடீர் நடவடிக்கை

## பாதுகாப்பு அலுவலகங்களை மூடுமாறு உத்தரவு!

அடிஸ்அபாபா மே29

இங்குள்ள அமெரிக்க, பிரிட்டிஷ், எகிப்திய பாதுகாப்பு அலுவலகங்களை உடனடியாக மூடும்படி எதியோப்பிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது-

எதியோப்பிய அரசாங்கம் மேற்கொண்ட இத்திடீர் நடவடிக்கைக்குக் காரணம் அறிவிக்கவில்லை.

பாதுகாப்பு அலுவலகங்களை மூடுமாறு உத்தரவிட்டதுடன் ஏழுநாட்களுக்குள் அமெரிக்கத் தூதரக ஊழியர்கள் சிலர் வெளியேற வேண்டும் என்றும் தனது உத்தரவில் எதியோப்பிய அரசாங்கம் கேட்டுள்ளது.

## எம்ஜி ஆர் - ஜனதா உடன்பாடு உண்டா?

### மத்திய மந்திரி மறுப்பு

சென்னை, மே 30

ஜனதா கட்சிக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்துக்கும் இடையே இரகசிய உடன்பாடு உண்டென்று காங்கிரஸின் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் கூறிய குற்றச்சாட்டை மத்திய அமைச்சர் திரு. ரவீந்திரவர்மா சென்னையில் மறுத்தார்.

ஜனதா கட்சிக்கும் அ. இ. அ. தி. மு. கவுக்கும் இடையில் இரகசிய உடன்பாடு உள்ளது என்று திரு. சுப்பிரமணியம் குற்றஞ்சாட்டியிருந்தார். (உ)

### அங்கோலாவில்

## நிதி அமைச்சரும் நால்வரும் கொலை!

லண்டன், மே..92

அங்கோலாவில் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள், நிதிஅமைச்சர் உள்ளிட்டு ஐவரைக் கொலை செய்துவிட்டனர் என்று அங்கோலா ஜனாதிபதி இன்று அறிவித்துள்ளார்.

கிளர்ச்சிக்காரர்களினால் கொல்லப்பட்டவர்களில் இருவர் எரிக்கப்பட்டனர் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இதனிடையே கிளர்ச்சிக்காரர்களில் ஒரு தலைவர் உடனடியாக மரணதண்டனைக்குள்ளானார் என்று அறிவிக்கப்படுகிறது.

### இறுதிக் கண்ணோட்டம்

சென்னை, மே 29

அடுத்த மாதம் 12,14-ம் திகதிகளில் நடைபெறும் தமிழ்நாடு சட்ட சபைத் தேர்தலுக்கான எல்லா ஆயத்தங்களும் முடிவடைந்து விட்டன.

மொத்தமாகவுள்ள 234 சட்டசபைத் தொகுதிகளில் ஜனதா கட்சி 224 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதனது தோழமைக் கட்சிகள் 10 இடங்களில் போட்டியிடும்.

அ. இ. அ. தி. மு. கழகம் மொத்தம் 195 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

தி. மு. கழகம் 231 தொகுதிகளில் போட்டியிடும் மிகுதியாவுள்ள 3 தொகுதிகளில் ஜனதா வேட்பாளர்களை ஆதரித்துத் தனது அபேட்சகர்களை விலக்கிக் கொண்டதாக 'சமாச்சார்' அறிவிக்கிறது.

காங்கிரஸ் கட்சி 198இடங்களில் போட்டியிடுகிறது. பாரத கம்யூனிஸ்ட் கட்சி 33 இடங்களில் போட்டியிடுகிறது.

### மாநாடு ஆரம்பம

பாரிஸ், மே 29

செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்குமிடையே நிலவும் பிரச்னைகளைத் தீர்க்கும் முகமாக இங்கு ஆரம்பமான மகாநாட்டில் நல்ல அறிகுறிகள் காணப்படுவதாகச் செய்திகள் தெரிவித்தன.

மூன்ருவது நாடுகளுக்கு நூறு கோடி டாலர் உதவியை கைத்தொழில் நாடுகள் வழங்குவது சம்பந்தமாக இன்னும் முடிவாகவில்லை என்றும் கைத்தொழில் நாடுகள் வளர்முக நாடுகளின் அமைச்சர்கள் மகாநாடு நாளை ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

### பழச் செய்கை

அம்பாறை, ஞாயிறு

அம்பாறை மாவட்டத்தில் பப்பாசி பழச் செய்கையை விஸ்தரிக்க இலங்கை பழச் சபை முன்வந்திருக்கிறது.

## மாருதிவிவகாரம்: தனிநபர் கமிஷன் நியமனம்

### முன்கூட்டியே சஞ்சய் ஜாமீன் மனு தாக்கல்!

புதுடில்லி, மே, 9

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரகாந்தியின் மகன் சஞ்சய் காந்தியின் 'மாருதி' விவகாரம் தற்போதுஉச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

'மாருதி' நிறுவனங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள தனிநபர் விசாரணைக்கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அலகபாத் உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி திரு. டி. எஸ். மேதர் தனிநபர் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிறுவனங்களுக்கு தகாதமுறைகளில் சலுகைகள் வழங்கப்பட்டனவா? அரசு அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதா என்பது குறித்து இக்கமிஷன்விசாரணை நடத்தும். இவ்வருடடிசம்பரில் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. கமிஷன் விரும்பினுல் இடைக்காலத்திலும் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சஞ்சய் மனு**

இதனிடையே சஞ்சய்காந்தி டில்லி உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்துள்ளார்.

முன்கூட்டியே ஜாமீன்கோரி சஞ்சய் தாக்கல் செய்துள்ள இம்மனு மீது நாளை திங்கட்கிழமை விசாரணை நடைபெறும்.

ஏற்கனவே மாருதிகம்பெனி விவகாரம் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட இருவர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மணிவாக்கு

ஓர் இலட்சியத்தைக் கடைப்பிடியாது வாழ்பவன் சுக்கான் இல்லாத கப்பலுக்கு நிகராவான் —மகாத்மாகாந்தி

ஈழநாடு

THE EELANAADU

## தர்ம நியாயம் வேண்டும்

நுவரேலிய - மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் பெரிய தோட்டங்களைத் துண்டுபோட்டு காணி இல்லாதவர்களுக்கு பங்கீடுசெய்யும் திட்டத்தை அரசாங்கம் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதாக ஒரு செய்தி கூறுகின்றது.

அப் பிரதேசத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்களும், அவர்களின் தொழிற்சங்கங்களும் காட்டிய கடும் எதிர்ப்பின் காரணமாகவே அரசு இந்த முடிவுக்கு 'வந்திருப்பதாக எண்ண இடமுண்டு.

காணியில்லாதவர்களுக்கு காணித் துண்டுகளை வழங்கும் நடவடிக்கையை யாரும் எதிர்க்கமாட்டார்கள்—எதிர்ப்பதில் நியாயமுமில்லை.

ஆனல்! எதிர்ப்பு எழுந்ததற்கு அடிப்படைக் காரணத்தை உணர்ந்தால் அரசின் இந்த நடவடிக்கையில் எவ்வளவு 'தூரத்தில்' நியாயம் இருக்கிறது என்பது புலனுகும்.

தேர்தல் நடைபெறவிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தான் இவ்வளவு அவசரமாக இப்பகுதியில் காணிகளைப் பகிர்ந்தளிக்க வேண்டுமா என்று சிலர் கேட்கிறார்கள். அரசியல் நோக்கத்துடன் தான் இதில் இவ்வளவு அவசரம் காட்டப்பட்டது என்பது அவர்கள் கருத்து.

ஆனல் தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் தெரிவித்து வரும் எதிர்ப்புகளுக்கு இவையல்ல காரணம்.

பங்கீடு செய்யப்படவிருக்கும் பகுதிகளில் நிரந்தரமாக வாழ்ந்துவரும் ஏழைத் தொழிலாளர்களின் வாழ்வுக்கு வழிசெய்யாமல் ஒரு தலைப்பட்சமாக இக்காணிப் பங்கீடு மேற்கொள்ளப்படவிருந்ததே எதிர்ப்புகளுக்கு பிரதான காரணம்.

இந்தியவம்சாவளியினரான ஏழைத் தொழிலாளர்கள் இப்பகுதிகளில் பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கைப் பிரஜைகள் அல்லது பிரஜாவுரிமைக்கு மனுப்போட்டிருப்பவர்கள். கணிசமான அளவினர் இந்தியாவுக்குப் போகவிருப்பவர்கள்.

இருக்கும் இடத்தைவிட்டு நகர்ந்தால்குடியிருக்கமாற்று இடம்கிடையாது. வேலையும் போய்விடும்.

இவர்கள் தனிமனிதர்களும் அல்ல கணவல... மனைவி, தகப்பன், தாய், பச்சிளம் குழந்தைகள், வயோதிபர்கள் என்று பல கிளைகளுடன் கூடிய குடும்பங்களைக் கொண்டவர்கள். இப்படியான இம் மக்களின் மறுவாழ்வுக்கு வழிசெய்யாமல் திடீரென அப்புறப்படுத்திவிட்டு அந்தக்காணிகளைப்பங்கீடு செய்வது எந்த வகையிலும் நியாயமாகப் படவில்லை.

தர்ம சிந்தனையுள்ள எவருமே இதனை ஏற்கமாட்டார்கள்.

காணிப்பங்கீட்டில் சிங்கள மக்களுக்கே முதலிடம் கொடுக்கப்படும் என்று அரசாங்கக் கட்சித் தலைவர் ஒருவர் கூறியதாக சில தினங்களுக்கு முன் பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருந்தது.

இதுவேதான் அரசின் கொள்கையென்றாலும் கூட காணிப்பங்கீடு செய்யுமுன் அங்கே குடியிருக்கும் ஏனைய சமூகத்தவர்களுக்கு மாற்றுவழி செய்ய வேண்டாமா?

இலங்கைப் பிரஜாவுரிமை பெறும் இந்திய வம்சாவழியினருக்கு ஏனைய பிரஜைகளுக்குரிய; சகல உரிமைகளும் வழங்கப்படும் என்ற சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த வாக்குறுதியையே இது மீறுவதாக இல்லையா?

இந்தியா திரும்பவிருப்பவர்களுக்குக்கூட அவ்வாறு திரும்பும் வரையில் இங்கு ஏற்கனவே செய்து வந்த தொழில்களைத் தொடர்ந்து நடிக்க உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது.

எழுத்துப் பூர்வமாகவும். உணர்வு பூர்வமாகவும் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் செயல் படுத்தப்படும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதி காற்றோடு போய்விட்டதா? என்று கேட்கத் தோன்றுகிறது.

காணிப்பங்கீடு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் செய்தி அப்பகுதியில் வாழும் ஏழைத்தொழிலாளர்களுக்கு ஓரளவுக்குத்தான் நிம்மதியளிக்க முடியும். தேர்தலின் பின்னர் மீண்டும் இந்தக் கெடுபிடிகள் ஆரம்பமாகலாம்.

அதற்கு இடமில்லாமல் தர்ம நியாயத்துடன் இந்த விஷயத்தை அரசு அணுகுதல் வேண்டும்.

இது மனிதர்கள் சம்பந்தப்பட்ட விஷயம் — என்பதை கருத்தில் கொள்வது அவசியம்

# பாலாவியின் கரைமேல் இன்று பஞ்சரத பவனி

நமது ஈழத்திருநாட்டில் நாயன்மார்களால் பாடல் பெற்ற சிவத்தலங்கள் இரண்டு ஒன்றுதிருக்கேதீஸ்வரம் மற்றது திருக்கோணேஸ்வரம். திருஞானசம்பந்த நாயனாாலும் சுந்தரமூர்த்தி நாயனாாலும் பாடல்பெற்ற தொன்மை பொருந்திய சிவத்தலமாகிய திருக்கேதீஸ்வரத்திற்கு சென்ற வருடம் திருக்குடத்திருமுழுக்கு விழா நடைபெற்றது. இவ்வருடம் கடந்த 22ந் திகதி கொடியேற்றத் திருவிழாவுடன் இத்தலத்தின் உற்சவ விழாக்கள் ஆரம்பமாகியது. இன்று ரதோற்சவமும நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

இன்று நடைபெறும் ரதோற்சவம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. நானூறு ஆண்டுகளின் பின் இவ்வாலயத்தில் இன்று முதல் முதலாக தேர்த்திருவிழா நடைபெறுகிறது. பஞ்சரதங்கள் இன்று ஆலயத்தைப் பவனிவரும்.

வடமாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் மாதோட்டம் என்ற இடத்தில் இச்சிவத்தலம் அமைந்துள்ளது. "மாதுவட்டா" என்பவர் இங்கே இருந்து சிவனைப்பூசித்து வணங்கியதால் "மாதுவட்டபுரம்', என வழங்கியபின் மாதோட்டம் என்று ஆயிற்று என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். கேது வழிபட்டதால் கேதீஸ்வரம் என்ற பெயர் இத்தலத்திற்கு உண்டாகியது. இங்கே சிவன் சுயம்புலிங்கமாகக் காட்சியளிக்கிறார்.

பல நூற்றாண்டுகள் தொன்மைவாய்ந்த இச்சிவத்தலத்தின் பெருமைகள் இன்னும் மண்ணுள் மறைந்துகிடக்கின்றன. எமது நாட்டிற்கு வந்து குடியேறி ஆட்சி நடத்திய அந்நியர் அநியாயங்களுக்குமேல் அநியாயங்களை இக்கோவிலுக்குச் செய்துள்ளனர். இதனல்பண்டைக்காலத்தில் இலங்கையின் சிறந்த வாணிகத்துறைமுகமாகவிளங்கிய "மாதோட்டம்" இன்று துறைமுகமாக இல்லை. இன்றைய மாதோட்டம் மண் மூடிய பகுதிகளுக்கப்பால் இப்போது காட்சியளிக்கிறது. நமது சைவப்பெருமக்களின் பெருமுயற்சியால் இப்போது இத்தலம் முற்றுகப் புனரமைப்புச் செய்யப்பட்டு குடமுழுக்கு விழாவும் நடைபெற்றுவிட்டது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றையும் முற்றுகப் பொருந்தியது திருக்கேதீஸ்வரம்.

"பாலாவி" என்ற தீர்த்தம் இருக்கிறது. வருடந்தோறும் நடைபெறும் சிவராத்திரி விழாவிற்கு இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து சைவபக்தர்கள் இங்கு வந்து கூடுவார்கள். மேலும் இச்சிவத்தலம் தென்னிந்திய சிற்பக்கலை முறைப்படி மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.'

இந்தியவிலுள்ள சிவத்தலங்களுக்குள் எல்லாம் நாயன்மார்கள் நேரில் சென்றே திருப்பதிகங்கள் பாடியுள்ளார்கள். ஆனல் எமது ஈழத்திருநாட்டின் சிவத்தலங்களாகிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியவற்றுக்கு அவர்கள்வராமலே தென்னிந்தியக் கரையிலிருந்து தேவாரப்பதிகங்கள் பாடியுள்ளார்களே யானல் எமது சிவத்தலங்களின அற்புதம்தான் என்னே!

இத்தலத்திற்கு வந்து திருக்கேதீஸ்வரநாதர் சமேத கௌரி அம்மனை வணங்கி புண்ணிய பாலாவித்தீர்த்தத்தில் மூழ்கி எழுந்தால் பலவிதமான நோய்கள் வினைகள் நீங்குவதாக தட்சனகைலாயமான்மியம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

கண. ஜீவகாருண்யம்,
துரை சகு

### வடம்பிடிக்க வாருங்கள்

ஆயிரமோ; யஞ்நூறோ! ஆண்டின் பின்னர்
அருள்பெருகு திருக்கேதீச் சரத்து நாதர்
தாயெங்கள் கௌரியுடன் தவத்தோர் போற்றத்
தலமிலங்கத் தேரேறும் பவனி காணத்
தூயசைவத் தொண்டர்காள்!, ஓடி வாரீர்!
தொழுதெழுவார் துயர்தீரும் மக்கள் வாரீர்!
மாயவினை பறந்தோடும் வடப்பிடிக்க
வாருங்கள்! வாழ்த்திடுவோம்: வணங்கு திற்போம்!

பஞ்சரதம் தமிலமர்ந்து பரமன், சக்தி
பாலரொடு பவனிவரும் பாங்கு கண்டு
அஞ்செழுத்தை நன்னோதி ஆரம் பூண்டு
'அரகரா' எனவேத்தி நீறும் பூசிச்
செஞ்சரணம் சரணெனத்தே வாரம் பாடித்
திரண்டு சிவசிவ என்றே கூவி யாடிக்
கொஞ்சுமொழிக் கௌரிபதம் கும்பிட் டின்றும்
கோதகன்று குணம்பெறுவோம் கூடி வாரீர்!

வசந்தத்தில் வைசாசி விசாகந் தன்னில்
வளங்கொணிக்கும் பாலாவித் தீர்த்தம் ஆட
இசைந்ததுவும் தெய்வீகம்! ஏற தேறி
இன்பநட ராசரெழுந்(து) அருளும் காட்சி
நயந்துருகிக் கண்டுகளி கூர்ந்து நாமும்
தன்மைபொலி பாலாவி படிந்தே யாடி
வியந்தானுன் புகழ்பாடி வினைகள் வீய
மெய்ம்மைநிலை நின்றிடுவோம் விரைந்து வாரீர்!

—வித்துவான் சி. ஆறுமுகம்

# "சர்வஜனவாக்கெடுப்பில் கூட்டணிவாக்குகளுடன் என்வாக்குகளையும் சேர்க்கலாம்"

## கொட்டடியில் குமார் உரை

யாழ்ப்பாணம், திங்கள் 'தமிழர் விடுதலை கூட்டணியின் 'தமிழ் ஈழ' கொள்கையில்தான் நானும் போட்டியிடுகிறேன். இத்தேர்தல் சர்வஜன வாக்கெடுப்பாக கருதப்படும் பட்சத்தில், கூட்டணி வாக்குகளுடன் எனக்குகிடைக்கும் வாக்குகளையும் சேர்த்து கணக்கிடலாம்.

கொட்டடியில் நடந்த தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழ்காங்கிரஸ்வாலிப முன்னணி தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சி. உமாபதி தலைமையில் நடந்த கூட்டத்தில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவுக்கு கூட்ட ஆரம்பத்தில் இருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: நான் தமிழ் காங்கிரஸ் நான்கு ...ணைக் கொடியின் கீழ் நான் போட்டியிடுகிறேன். எந்த சந்தர்ப்பத்திலும், தமிழ்காங்கிரஸைவிட்டு வெளியேறமாட்டேன். தமிழ்க்காங்கிரஸை வளர்த்து, தமிழ்ஈழத்தை அடைவதுதான் என்லட்சியம்.

'நான் இயங்கவில்லை என சிலர் கூறிவருகிறார்கள். 70ம் ஆண்டு தேர்தலின்போதே, அரசியலில் பிரவேசிக்கவிரும்பினேன். அத்தேர்தலில் போட்டியிடுமாறு பலர் வற்புறுத்தினார்கள். ஆனல் என் தந்தை அதைவிரும்பவில்லை. ஒன்றில் நீ அல்லது நான் அரசியலில் இருக்கவேண்டும். ஒரே சமயத்தில் தந்தையும் மகனும் அரசியலில் இறங்கக்கூடாதென்று தந்தை கூறினார். என் தந்தை மூன்று வருடங்களுக்கு முன் இறந்திருந்தால் அன்றே நான் அரசியலில் இறங்கியிருப்பேன். என் தந்தை 10 வருடத்திற்குப்பின்னர் இறந்திருந்தால் அதன்பின்தான் நான் அரசியலில் இறங்கியிருப்பேன் ஆனலும், என் தந்தையின் அரசியல் நடவடிக்கைகளுக்கு, ஆதரவும், ஒத்துழைப்பும் கொடுத்துவந்திருக்கிறேன்.

'நான்பருத்தித்துறை தொகுதியில்தான் போட்டியிடவிரும்பினேன். அதனல் அங்கு சென்று மக்களை சந்தித்துவந்தேன். கடந்த தேர்தலில் யாழ்ப்பாண மக்கள் என் தந்தைக்கு 'மூன்றாவது இடத்தை கொடுத்தகாரணத்தினல் தாங்கள் விட்டதவறை உணர்ந்து அவருக்கு இம்முறை ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என யாழ்ப்பாண மக்கள் விரும்பினார்கள். ஆனல் இறைவன் அதற்கிடையில் அவரை அழைத்துவிட்டார். இதன் காரணமாக அச்சந்தர்ப்பத்தை யாழ்.மக்கள் எனக்கு கொடுக்க விரும்பி, என்னை யாழ்ப்பாணத்தில் போட்டியிடுமாறு கோரினார்கள். அவர்களின் அன்புக்கோரிக்கையை மறுக்க முடியாத காரணத்தினலேயே இங்கு போட்டியிடுகின்றேன்.

பருத்தித்துறை தொகுதியில் போட்டியிட கூட்டணிக்கு விண்ணப்பித்தேன். ஆனல் கூட்டணியின முதலாவது அபேட்சகர் பட்டியலில், பருத்தித்துறைக்கு வேறுஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். முதலாவது பட்டியலில், யாழ்ப்பாணம்பற்றி முடிவுசெய்யப்படவில்லை. அதனல் தமிழ்காங்கிரஸ் உபகுழு, எனக்கு யாழ்ப்

(7-ம் பக்கம் பார்க்க)

### கும்பாபிஷேகம்

சுழிபுரம்,ஞாயிறு

சுழிபுரம் குடியிருப்பு ஸ்ரீ வள்ளியம்மன் தேவஸ்தான மகா கும்பாபிஷேக வைபவம் 6 ம் திகதி அதிகாலை நடைபெறும்.

......

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்; திங்கள்

சுன்னகம், வருடப்புலம் மஹாமாரி அம்பாள்ஆலய வருடாந்த ஸஹஸ்ர சங்காபிஷேகம் ஜூன் 4ம் திகதி நடைபெறுகின்றது. பகல் அன்னதானமும் இரவு மேளக் கச்சேரி, இசைக்கச்சேரியுடன் நடைபெற்று அம்பாள் வீதி வலம் வருவார்.

### நேர்முகப் பரீட்சை

வேலணை, திங்கள்

சர்வதேச இளம்விவசாயிகள் கழக மாற்றுத் திட்டத்தின்கீழ் பிறநாடுகளுக்கு உறுப்பினர்களை அனுப்புவதற்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரியின் காரியாலயத்தில் இன்று 30-ம் திகதி நடைபெறுகிறது.

### பிரசாரக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

திரு. வி. தர்மலிங்கத்தின் முதல் தேர்தல் பிரசாரக்கூட்டம் ஜூன் 1-ம் திகதி சுன்னுகம் கதிரமலைச் சிவன் ஆலயத்திற்கு அருகாமையில் நடைபெறும்.

# 2000 ஆண்டுகள் அலைந்தயூதர் இன்றுஇஸ்ரேலைஅமைக்கவில்லையா?

'இலங்கையில் தமிழ் ஈழம் சாத்தியமா' என்னும் தலைப்பில் திரு. மு. ஏரம்பமூர்த்தி 'அதுஒரு பகற்கனவு' என்று எழுதிய கட்டுரைக்கு திருவாளர்கள் எஸ். பி. கிருஷ்ணனும், ஆ. நடராசாவும் தகுந்த பதில் அளித்திருக்கிறார்கள். எனினும் திரு. ஏரம்பமூர்த்தி சாத்தியமில்லை என்பதற்காகக் கூறிய பின்வரும் நான்கு காரணிகளை மறுத்து விவாதிக்க விரும்பகிறேன்.

## பொருளாதாரம்

இற்றைக்கு 2500 வருடங்களுக்குமுன்பு எகிப்துதேசத்தில் அடிமைகளாக இருந்த யூதர்களைப் பார்த்து மோசஸ் 'இறைவன் கட்டளை - புறப்படுங்கள், உங்கள் மூதாதையர் வாழ்ந்த உங்கள் தாயகத்திற்கு அங்கு பாலும் தேனும் ஓடும்; உண்பதற்கு வேண்டிய மட்டும் கோதுமையையும் இறைச்சிக்கு மந்தைகளையும் காட்டுகிறேன்' என்று கூறினான். சுதந்திர தாகம் கொண்டவர்கள் அவன் பேச்சைச் செவிமடுத்துப் புறப்பட்டார்கள். ஆனால் அடிமை வாழ்வில் ஊறியவர்களும் சுகசிவிகளும் 'கஷ்டமான பாதையை விரும்பாதவர்களுமான யூதர்கள் "இவர்களுக்குப் பித்துப் பிடித்துவிட்டது. இஸ்ரேலில் பாலைவனங்களும் கானல்நீரும்தான் உண்டு. இவன்பேச்சைக் கேட்டால் நிச்சயம் நாம் 'எல்லோரும் பாலைவனத்தில் இறப்போம்' என்று நையாண்டிபண்ணினார்கள். ஆனால் அவன்பேச்சைக் கேட்டு அவனைப் பின்தொடர்ந்தவர்கள் இறைவன் அவர்களுக்கு அளித்த அறிவையும், தன்னம்பிக்கையையும், விடாமுயற்சியையும் துணைக்கொண்டு பாலைவனங்களைச் சோலைவனங்களாக்கி, காடுகளைக் கனிகளாக்கி ஒரு பலம் பொருந்திய தேசத்தை ஸ்தாபித்து 590 வருடங்கள்வரை தன்னிகரற்று வாழ்ந்ததை சரித்திரமும், விவிலியக்கதைகளும் கூறும் வரலாறு. அவர்களுடைய பொருளாதாரத்துக்கு அடித்தளமாக அமைந்தது அவர்களுடைய தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், சுதந்திர வாழ்வில் அவர்கள் கொண்ட தீராத காதலுமேயன்றி அந்நாட்டின் மூலவளங்களோ,கனிவளங்களோ அல்ல. திரு. ஏரம்பமூர்த்தி போன்ற சுதந்திரதாகமற்றவரும், தன்னம்பிக்கையற்றவரும், ஒருவர் போதும், விடுதலைப்போரில் பங்குபற்றும் பத்துவீரர்களைக் கோழைகளாக்கு வதற்கும் மனந் தளரப்பண்ணுவதற்கும், தயங்கப்பண்ணுவதற்கும்திசை திருப்பவுமே உதவுவர்.

தமிழ்மக்களிடையே சுயநலமிகளாக இருந்தவர்களால் தமிழினம் இன்று நாடிழந்து, வலிவிழந்து சீரழிந்ததுபோல் ஊதர்கள் மத்தியிலும் இருந்த சதியாலும் இறைவனின் சாபத்தாலும் மோசஸ் இறந்து 500 வருடங்களுக்குப்பின் யூதர்கள் நாடிழந்து, நாடோடிகளாகவும் அடிமைகளாகவும் 2000 வருடங்கள் உலகில் எட்டுத்திக்கிலும் அலைந்து திரிந்து இன்று அவர்கள் தமது தவறுகளை உணர்ந்து இன்று அவர்கள் 'இஸ்ரவேல்' நாட்டை தாபித்து தமதுநாட்டை மத்தியகிழக்கில் பொருளாதாரத்திலும் சிறந்தநாடாக விளங்க வைத்திருக்கிறார்கள்,

பொருளாதாரத்திற்கு அடித்தளமாக அமைவது தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், சுதந்திர மனப்பான்மையுமே என்பதற்கு நடைமுறையில் கண்கூடாகக் காணக்கூடிய இன்னொருஉதாரணம்ஜப்பான் இரண்டாவது உலகமகாயுத்தத்தின்பின் ஜப்பானியபொருளாதாரம் சீர்குலைந்தபோதும் அவர்கள் மனந்தளராமல் விடாமுயற்சியோடு, மற்றநாடுகளின் தயவில் வாழக்கூடாது என்று எண்ணி உழைத்தார்கள். இன்று ஜப்பான் ஆசியாவிலேயே வாழ்க்கைத்தரம் உயர்ந்த நாடாக மிளிருகின்றது.

பொருளாதாரம் என்பது இறைவன் அளித்த அறிவையும், இருக்கும் இயற்கைவளங்களையும் கொண்டு மனிதசக்தியால் ஆக்கப்படுவதேயொழிய இயற்கையாக ஒரு நாட்டில் இருப்பது அல்ல. இன்றைக்கும் இலங்கைமக்கள் அனுபவிப்பது எமது தமிழ்ச்சகோதரர்கள் தேயிலைத் தோட்டத்திலும், ரப்பர்த் தோட்டத்திலும், தென்னந்தோட்டத்திலும் கட்டியெழுப்பிய பொருளாதாரந்தான் என்பதை சிங்கள அரசும் சிங்களமக்களும் மறந்ததுபோல் நண்பர் ஏரம்பமூர்த்தியும் மறந்திருப்பார் என்று நான் எண்ணவில்லை.

## ஆயுதபலம்

## ஆள்பலம்

ஆயுதபலத்திலும் ஆள்பலத்திலும் குன்றந்தநாடுகள்கூட புத்திசாதுரியத்தால் வென்றே தீருவோம், வெற்றி இன்றேல் அழிவுநிச்சயம் என்ற கட்டத்தில் மனஉறுதியோடுபோராடி கண்டவெற்றிகள் சரித்திரத்தில் பல உண்டுஎன்பதை திரு. ஏரம்பமூர்த்தி அறியாதிருக்கமாட்டார். ஆள்பலமும் ஆயுதபலமும் மாத்திரம் ஒருபோரின் முடிவை நிர்ணயிப்பதில்லைஎன்பதற்கும் சான்றுகள் உள.

சமீபகாலத்து வியட்நாம் போர் இதில் விடுதலைவேட்கை கொண்ட வியட்நாமியர், ஆயுதபலத்திலும் ஆள்பலத்திலும், பொருளாதார விஞ்ஞானபலத்திலும் கூடிய அமெரிக்க - தென்வியட்நாமிய மற்றும் அவர்களுடைய நேசநாடுகளின் படைகளையும எதிர்த்துக் கண்ட வெற்றி, சீன-ரஷ்ய உதவிகளின் பலன்அல்ல சுதந்திரவேட்கை கொண்ட வியட்நாமியரின் மனஉறுதிக்குரிய வெற்றியென்பதையும் நண்பருக்குச் சொல்லிவைக்க விரும்புகிறேன்.

## பிறநாட்டு உதவி

இதுஇல்லாமலே போராட முடியும். எமது போராட்டம் அகிம்சைப் போராட்டமென்பது உலகமறிந்தவிஷயம். இந்திய உபகண்டம் எந்தநாட்டு உதவியுடன் எந்த ஆள்பலத்தைக்கொண்டு சுதந்திரத்தைப் பெற்றது என்பதை நண்பர் ஏரம்பமூர்த்தி உணர்வாராக.

த. குறளன்
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

விவாதமேடை

## வேலரும் மயிலரும்



வேலர்: அந்த அபேட்சகர் போறவீடெல்லாம் பூட்டியிருக்காம்!
மயிலர்: இந்தக்காலம் ஆர்வீட்டிலை இருக்குதுகள். எல்லாம் தியேட்டரிலை. அபேட்சகரை தியேட்டர் வாசலில் நின்று கும்பிடச் சொல்லு.

— சுந்தர்

# பத்திராஜாவுக்கு 10 ஆலோசனைகளும் படத்தில் 10 குறைபாடுகளும்

நமது யாழ்ப்பாண சினிமாப்பட ரசிகர்களின் ரசனை மிகவும் புதுவிதமான ஒன்றாகும். இந்த ரசனைக்கு ஏற்ற விதத்தில் 'பொன்மணி' தயாரிப்பாளர்கள் படத்தை தயாரிக்க தவறிவிட்டனர் என்பதை எடுத்த எடுப்பிலேயே முதல் சொல்லிவிடவேண்டும்.

வளமைபோல அதிவீரபிரதாப சம்பவங்கள் சகல வல்லமைகளும் பொருந்திய ஒரு கதாநாயகன், சகல இலட்சணங்களும் பொருந்திய இலட்சுமிகரமானஒரு அழகுதேவதையான ஒருகதாநாயகி, சகல துர்க்குணங்களும் பார்ப்பதற்கே கொடூரமான உருவமும் தனக்கான ஒரு சண்டியர் கூட்டத்தை வைத்திருப்பவனுமாகிய ஒரு வில்லன், கதாநாயகனுக்கு உயிருக்குயிரான ஒரு நண்பன் (கோமாளித் தனமுள்ளவன்) கதாநாயகிக்கு அந்தரங்கமான ஒரு தோழி (அடிக்கடி உடலுறவு சம்பந்தமாகப் பேசிக் கொள்பவள்) ஆகியவர்களில் ஒருவரையேனும் மூறைப்படி இப்படத்தில் காணமுடியவில்லை.

கதாநாயகியும கதாநாயகனும் ஒரு அழகான பூந்தோட்டத்தை ஆக்கிரமித்துக்கொண்டு, மாமிச உறவுகள் பற்றி பாட்டுக்களை பாடி, கூத்துக்கள் ஆடி பின்னல்களை இழுத்து, நூரத்திப் பிடித்து உள்ளங்கால்களிலிருந்து உச்சிவரை வருடி சுதந்திரமான சேட்டைகள் செய்து, ஒரு நிகழ்ச்சிக்கு மாறி மாறி வெவ்வேறு உடுப்புகளுடன் தோற்றமளித்து ஒன்றாக நீராடி கிசுகிசுப்புகள் செய்து சகல பக்கவாத்திய ஓசைகளுடன் காதல் பாட்டுகள் மாறி மாறிப்பாடி வில்லனானவன் கதாநாயகியை தூக்கிச் சென்று கற்பழிக்க முனைய கதாநாயகன் அவன் மேல் பாய்ந்து வில்லனை நையப்புடைத்து காதலியை மீட்பதும் இடையிடையே எட்டுப்பத்து பேர்களுடன் வீரப்போர் புரிவதும், காரில் அல்லது மோட்டார் சைக்கிளில் பயங்கரமான சவாரி செய்வதும் ஆகிய காட்சிகளில் ஒன்றையேனும் தயாரிப்பாளர்கள் 'பொன்மணி' என்ற படத்தில் புகுத்தாமல் விட்டுவிட்டது பெரும் குறையே.

படம் தொடங்கி முடிவுவரையில் இடைவிடாமல் மட்டசுத்தமான- வீரமான இலக்கிய சுவைசொட்டும் காதல் மயமான, எதுகைமோனை பிசகாத பேச்சுக்களை புகுத்துவதற்கு பதிலாக யாழ்ப்பாணத்து வழக்குத் தமிழில் சம்பாஷணையை அமைத்திருப்பதன்மூலம் இப்படத்தின்நயூபகர்த்தா நமது யாழ்ப்பாண தமிழ் ரசிகர்களை உதாசீனம் செய்துவிட்டார் போலவும் தோன்றுகின்றது. தென் இந்திய தமிழ்ப்பட கதைவசனப் புத்தகங்களை படித்தும் தென் இந்திய சிம்மக்குரல்களை திரையில் கேட்டுக்கேட்டுப் பழகி விட்ட நமது ரசிகர்கள்வசனங்களே இல்லை என்று கூறக்கூடிய அளவுக்கு குறைத்தும் இருக்கும் வசனங்களை இயற்கைப்பேச்சில் பேசவைத்துள்ளதும் தமிழ்ரசிகர்களைஏமாற்றுவதற்கென்றே கதாசிரியர் எடுத்த முயற்சியாகும்.

கே. டானியல்

பாடல்கள் என்றபேரில் வரிக்குவரி வம்புகளாகவும் தாசனைகளாகவும் அமைப்பதற்குபாடல்களை இயற்றிவர்கள் தவறிவிட்டது மன்னிக்க முடியாத் குற்றமாகும்.

கதைக்கு பொருந்தாவிடினும் மாளிகைபோன்ற வீடுகளையும் பென்னம் பெரிய நந்தவனங்களையும் படப்பிடிப்புக்கு உட்படுத்த தவறியதுமல்லாமல் ஒரு சாதாரணமான கிராமத்து நாற்சார் வீட்டையும் அதனுள்ளே கதாபாத்திரங்களையும் உலாவவிட்டு கதைநகர்வுக்கான பெருமளவு காட்சிகளை எடுத்துள்ளது நமது ரசிகர்களின் மன்னிப்புக்கு உரிய ஒன்றல்ல

இக்கதையின்படி நாற்சார் வீட்டிற்குள் நடமாடும் பாத்திரங்கள் பத்தாயிரம் மெழுகுவர்த்தி சக்தியுள்ள மின்சார வெளிச்சத்தில் நடமாடுவதாக அமையவேண்டாமா (அப்படி அமைந்தால் தான் எமதுரசிகர்களுக்கு திருப்திவரும்)இதை செய்யாத ஒளிப்பதிவுகாரர் மீது கோபம்தான் வருகிறது.

தமிழ்ப்படமென்றால் தொடக்கத்தில் இருந்து முடிவுவரை தியேட்டர் தாங்காத சத்தமாகவே இருக்கவேண்டும். பாத்திரங்களின் பேச்சு, பக்கவாத்தியங்கள், பாட்டுக்காரர்களின் குரல்கள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து உள்ளே இருந்து பார்ப்பவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசுவதை தடுப்பவையாகஇருக்கவேண்டும். (காதுச் சவ்வு நோவெடுப்பதில்கூட நமது ரசிகர்களுக்கு அக்கறை இருப்பதில்லை) இத்தகைய குழைந்த குரல்களை 'பொன் மணியில் கேட்கமுடியவில்லையே.

தன்னந்தனியாக கொங்கு நாட்டுத் தமிழை வைத்தே தமிழ்ப்படங்கள் வந்துள்ளன. அந்தப்படங்களுக்கு தென் இந்தியரவின் தமிழ மக்கள் மத்தியில் வரவேற்பு நிறையக் கிடைத்ததுண்டு ஆனால் இலங்கையில் தயாரிக்கப்பட்ட படத்தில் இலங்கையின் ஒரு பகுதியான யாழ்ப்பாணத்து தமிழ் பேசப்படும்போது கேலிபண்ணி சீழ்க்காயடித்து கூக்குரலிடும் காட்சியை பொன்மணியை பார்க்கச் சென்றவர்கள் அனுபவத்தில் கண்டனர் இந்த ரசிகர்களின் அடிமைப்புத்தியை புரிந்து கொள்ளமுடியாத இயக்குனர் பத்திராசா அவர்களுக்கு பத்துப் புத்திமதிகள்.

1. குறைந்தது இரண்டரை மணிநேரமாவது படம் ஓடக் கூடியதாக இருக்கவேண்டும் இல்லாவிட்டால் ரசிகன் கத்துவான்.

2. காதல்புரியும் (ஓடிப் பிடித்து விளையாடும்) காட்சிகள் குறைந்தது ஐந்தாவது இருக்கவேண்டும் அல்லது ரசிகன் கத்துவான்.

3. கதாநாயகன் கதாநாயகி (குறைந்தபட்சம்) ஐம்பது உடுப்புகளாவது மாறி மாறி உடுத்தவேண்டும். அல்லது ரசிகன் கத்துவான்.

4. பாத்திரங்களின் முகங்களில் எந்தவேளையிலாவது கறுப்பு நிழல் விழாதவகையிலும் இரவு பகல் என்ற வித்தியாசம் இல்லாது வெள்ளை வெளேர் என்ற வகையிலும் ஒளிப்பதிவுகள் அமையவேண்டும். அல்லது ரசிகன் கத்துவான்.

5. கதாநாயகன் வீரப்பிரதாபதோற்றமுடையவனாகவும் சுறுசுறுப்பானவனாகவும் இருக்க வேண்டும். நான்கைந்து தடவைகளாவது அவன் வில்லனையும் அவனது கையாட்களையும்

(7-ம் பக்கம் பார்க்க)

## திருமதி துரையப்பா

# கணவர் நினைவாஞ்சலியில் கலந்துகொள்ளவே வருகிறார்

யாழ்ப்பாணம், திங்கள்
காலஞ்சென்ற முன்னாள் மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவின் துணைவியார் அவரது கணவரின் இரண்டாவது ஆண்டு நினைவாஞ்சலியில் கலந்துகொள்வதற்காக ஜூலை மாதம்தான் இலங்கை வருவார்.

ஜூலை மாதம் அமரர் துரையப்பாவின் 2வது ஆண்டு நினைவு தினம் இடம்பெறவிருக்கின்றது. தேர்தல் வேலைகளில் ஈடுபட அவர் வருவார் என்று உலவும் வதந்தியில் உண்மையில்லை.

இத்தகவல்களை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். அமைப்பாளர் சட்டத்தரணி பூபாலன் வெளியிட்டார்.

திருமதி துரையப்பா தமது புத்திரியுடன் கணவரின்நினைவு அஞ்சலியில் மாத்திரம் கலந்து கொள்ளவருகிறார் என்று திரு. பூபாலன்கூறினார்.

## கிளிநொச்சியில்

# தேர்தல்கிளைகளை ஆசிரியர்கள் அமைக்கின்றனர்

கிளிநொச்சி, ஞாயிறு
கிளிநொச்சித் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு.வீ.ஆனந்தசங்கரியின் தேர்தல் பிரசாரத்துக்கு அனுசரணையாக கிளிநொச்சி ஆசிரியர்கள் இரண்டாம் பணியாக சகலவிதத்திலும் பாடுபட்டு அவரது வெற்றிக்காக முழுமூச்சுடன் உழைத்து வருகின்றனர்,

கிளிநொச்சி, ப[illegible], பூநகரி ஆகிய உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவில் உள்ள ஆசிரியர்கள் அனைவரினதும் ஒத்துழைப்புடன் ஆங்காங்கே உள்ள ஊர்களில் இல்லங்கள் தோறும் இவர்கள் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஆசிரியர்கள் பேராதரவுடன் நிதி திரட்டும் பணி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தைப் பரவலாக்கவும் விரைவாக்கவும் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில் கிளைகள் அமைக்கப்படவுள்ளன. இக்கிளைகளின் இணைப்புப் பணியகம் கிளிநொச்சியில் செயற்படும்.

மேலும் உடுப்பிட்டித் தொகுதி வேட்பாளர் திரு. த.இராசலிங்கம் கிளிநொச்சி வட்டாரக்கல்வி அதிகாரியாக இருந்து இப்பகுதியின் கல்வி அபிவிருத்தியில் ஆற்றிய அளப்பரிய சேவையைக் கௌரவிக்கு முகமாக அவரது வெற்றிக்குப் பாடுபடுவது எனவும் இப்பகுதி ஆசிரியர் தீர்மானித்துள்ளனர்.

இவ்வேற்பாடுகளை விரிவாக்கும் முகமாக இம்மாதம் 30-ம் திகதி திங்கள் மாலை கிளிநொச்சியில் ஒருபொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. (அ)

## ஜனதா சார்பில் 'வாசு' போட்டி

கொழும்பு, சனி
லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் கிரியல்ல எம். பி. திரு.வாசுதேவா நாணயக்கார தற்போது சிறையிலிருக்கும் ரோகண விஜயவீரா தலைமையிலான ஜனதா விமுக்திப் பெரமுனை சார்பில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுகிறார்.

எகலியகொடையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் திரு. வாசுதேவாவே இத்தகவலை வெளியிட்டார். (ம்-இ)

......

## நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்
காரைநகரைச்சேர்ந்த திரு. கே. நடேசன் வட்டக்கச்சிக்கு கிராமசேவையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. ஜே. கே. கருணைராஜன் ஆனையிறவு தட்டுவன்கொட்டி கிராமசேவையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஆ)

......

## அமைதியாக ஆலயப்பிரவேசம்

யாழ்ப்பாணம், திங்கள்
'பருத்தித்துறையிலுள்ள மாதனை கண்ணகை அம்மன் ஆலயம் சகல மக்களும் வழிபடுவதற்கு திறந்துவிடப்பட வேண்டும் என்று அ.இ. சிறுபான்மைத் தமிழர் மகாசபை கேட்டுக்கொண்டதற்கமைய ஆலயநிர்வாகிகளும், அவ்வூர்ப் பிரமுகர்களும் சேர்ந்து நடவடிக்கை எடுத்து, சென்ற வியாழக்கிழமை அவ்வாலயத்தைத்திறந்துவிட்டுள்ளனர்.

ஆலயப்பிரவேசம் சுமுகமாகவும் நல்ல சூழ்நிலையிலும் நடைபெற ஒத்துழைப்பும்,ஒத்தாசையும் நல்கிய அவ்வாலய நிர்வாகிகளுக்கும், அவ்வூர் பொதுமக்களுக்கும் மகாசபை பொதுக்காரியதரிசி திரு. பீ. ஜே. அன்ரனி வெளியிட்டுள்ள அறிக்கையில் நன்றி தெரிவித்துள்ளார்.

வடபகுதியிலுள்ள பிரசித்திபெற்ற ஆலயங்கள் சில, சிறுபான்மைத்தமிழரின் வழிபாட்டிற்காகத் திறந்துவிடப்பட்டபோதும் கிராமப்பகுதியிலுள்ள பல இந்து ஆலயங்கள் இன்னும் சிறுபான்மைத்தமிழ் மக்கள் ஆலயத்துட்சென்று வழிபட மறுக்கப்பட்டுவருவது கவலைக்குரியதாக இருக்கின்றது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது [ச]

## சாவகச்சேரி எழுச்சி மாநாடு

யாழ்ப்பாணம், திங்கள்
சாவகச்சேரி தமிழ் இளைஞர் பேரவையின் எழுச்சிமாநாடு அடுத்தமாதம் 4, 5-ம் திகதிகளில், சாவகச்சேரியில் நடைபெறும். முதல்நாள் நிகழ்ச்சிகள் தந்தை செல்வா அரங்கிலும், மறுநாள் நிகழ்ச்சிகள் தியாகி சிவகுமாரன் அரங்கிலும் நடைபெறும். நிகழ்ச்சிகளில் சைக்கிள் ஊர்வலம் தமிழ் இளைஞர் மாநாடு, கவியரங்கு,கலைநிகழ்ச்சிகள்,மாதர் மாநாடு இளம்தமிழர்மாநாடு மௌனஊர்வலம் ஆகியன இடம் பெறும். இறதித்தினத்தன்று சாவகச்சேரி சந்தை மைதானத்தில் பொதுகூட்டம் ஒன்றும் நடைபெறும். (கெ)

.......

## இந்த இளைஞரை தெரியுமா?

வவனியா. ஞாயிறு
கொழும்பு — யாழ் மெயில் ரயிலில் பிரயாணம் செய்த 22 வயது இளைஞர் ஒருவர் தவறி விழுந்து மரணமானார்.

இறம்பைக் குளத்தில் தண்டவாளத்தில் இனந்தெரியாத இந்த இளைஞரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

கருமை நிறமான இவர் ஒருபக்கமாக தலைசீவியுள்ளார்.

முழுநீளஷேர்ட்டும் பிஜாமா சாரமும் அணிந்து காணப்படும் இவரது சடலம், அடையாளம் காணும்பொருட்டு வவனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

உறவினர்கள் வவனியா பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். [உ]

## சேமிப்புக் கணக்கு அதிகரிப்பு

கொழும்பு, ஞாயிறு
தேசிய சேமிப்பு வங்கியில் இடப்படும் வைப்புப் பணத்தொகை, அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பதினறு கோடியே அறுபது லட்சம் ரூபா வைப்புப்பணமாக இருந்தது என்றும், குறைந்த வருவாய் உள்ளவர்கள் சேமிப்பில். அதிக அக்கறை

# தமிழ் மக்களின் வாக்கு யாருக்கு?

## முன்னாள் மேயர்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், திங்
''தமிழ்பேசும் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை உபயோகித்து எதிர்வரும் தேர்தலில்தமிழர்விடுதலைக்கூட்டணியின்வட்டுக்கோட்டைமாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை மீட்பதற்கு முடிவெடுக்கப்போகிறார்களா அல்லது மாறுனமுடிவை அறிவிக்கப்போகிறார்களா என்பதே தமிழ்பேசும் வாக்காளர் முன் வைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு கேள்வி''.

இவ்வாறுயாழ்ப்பாணமாநகராட்சி மன்றத்தின் முன்னை நாள் முதல்வர்களான சட்டத்தரணி சு. செ. மகாதேவா, சட்டத்தரணி சி. நாகராசா, டாக்டர் ச. அ. தர்மலிங்கம் ஆகியமூவரும் கூட்டாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அபேட்சகர்களை ஆதரித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

''மேற்படி கருத்துக்கணிப்பில் தமிழ்மக்கள் ஆதரவு எப்படியிருக்கிறதென்பதை தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்கள் மட்டுமன்றி அனைத்து உலகுமே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. காங்கேசன்துறையில் இடம்பெற்ற இடைத்தேர்தலில் ஒரு பானை சோற்றுக்கு ஒரு அவிழ் பதம் என்பதுபோல தந்தை மூதறிஞர் செல்வநாயகம் அவர்கள் ஈட்டியவெற்றி அமைந்தது. ஆயினும், ஆங்கும் பல்வேறு காரணங்களுக்காக ஒன்பதினாயிரம் தமிழர்கள் தேர்தலில் தந்தையவர்கள் முன்வைத்த கருத்தைப் பரிசீலனைக்கு எடுக்காது சொந்த விருப்புவெறுப்புகளுக்காக வாக்களித்தது தமிழ்மக்களுக்கு பாதகமாகவே அமைந்தது. அத்தேர்தலில் தந்தைவர்களோடு போட்டியிட்ட வேட்பாளரும், தேர்தலில் அவரை நிறுத்தியகட்சியும் இன்று ''தமிழ்ஈழத்''தின் சுயநிர்ணய உரிமையைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருப்பது ஓரளவுக்காவது தமிழ்மக்கள் எடுத்துக் கொண்டுள்ள முடிந்தமுடிபானவட்டுக்கோட்டைத்தீர்மானத்துக்குச் சாதகமான நிலையைப்பின் ஏற்படுத்திருப்பது உண்மை.

''எதிர்வரும் பொதுத்தேர்தல் 'தமிழ்ஈழத்தை'ப் பொறுத்த மட்டில் காங்கேசன்துறை இடைத்தேர்தலிலும் முக்கியமானது. முன்பு காங்கேசன் துறை இடைத் தேர்தலில் தமிழ்ஈழத்தின் மனப்போக்கு எப்படியிருக்கிறது என்பதற்கான ஒரு மாதிரி முடிவாகவே அது அமைந்தது. இப்போது அப்படியல்ல! தமிழ்ஈழம் முழுவதும் 'தமிழ் ஈழம்' சுதந்திர நாடாக அமைய வேண்டுமா அல்லவா என்பதை அறுதியிட்டுத் தீர்மானிக்கவேண்டிய கட்டம் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் மக்களை எதிர்நோக்குகிறது.

''தமிழ்ப்பேசும் மக்களுக்கு சுதந்திரத் தமிழ் ஈழம் வேண்டுமா வேண்டாமா? என்ற ஒரே பிரச்னையை முன்வைத்து பதவிக்குவரும் எந்தவொரு சிங்களக்கட்சியும் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றைநடத்தப் போவதில்லை. இதனைத் தமிழ் மக்கள் நன்குக உணர்ந்து கொள்ளவேண்டும். அதலால் தான் எதிர்வரும் பொதுத் தேர்தலை அந்த ஒரு பிரச்னை மீது மட்டுமே தமிழ்மக்களின் கருத்தை அறிவதற்குப் பயன்படுத்துவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வந்துள்ளது.

'மேற்படி சூழ்நிலையில், வேட்பாளராக நியமனம் பெற்றவர்களுடைய சொந்தக் குறைகளை அல்ல அவர்கள் எந்தக்கோரிக்கையை முன் வைத்துத் தேர்தலில் நிற்கிறார்கள் என்பதை மட்டுமே வாக்காளர் சிந்திக்க வேண்டும். வேண்டியவர். உறவினர்.

'தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர்நியமனத்தில் தவறு செய்திருக்கலாம், தவறு செய்

(7ம் பக்கம் பார்க்க)

காட்டுவதே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.


# தலை போகிறதா






பாடசாலை செல்லும பிள்ளைகளின்
தாய்மார்களுக்கு அப்படித்தான்...
ஆனால் கெமெக்ஸீனைப் பற்றிக்
கேள்விப்பட்டிருந்தால்
அப்படியிருக்கத்தேவையில்லை,
தலைப்பேனை முற்றாக ஒழிக்க
துரிதமான, நம்பிக்கையான வழி
அதுவே. உங்கள் பிள்ளைகளின்
தலையில் கெமெக்ஸீனை ஒரு
தடவை உபயோகித்தாற் போதும்-
பேன் முற்றாக அழிந்துவிடும்.
மீண்டும் பேன் வராமல் தடுப்பதற்கு 3
வாரங்களின் பின்னர் மீண்டும் உபயோகி
யுஙகள் கெமெக்ஸீன் பாதுகாப்பானது,
புணபடுததாதது. இதமான வாசனையுடையது.

கெமிககல் இன்டஸ்றீஸ்
(கொழும்பு) லிமிட்டட்,
த. பெ. எண் 352, ஹேமாஸ் கட்டிடம்,
பிரிஸ்டல் வீதி, கொழும்பு-1.
தெலிபோன்: 28421-6.

வெலிங்டன் ஃமுத்துராமன் ஃ. சுஜாதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார்—லதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

ராணி எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL Daily: 4-45,
7-00 & 9-30 p. m.
(JAFFNA)
3-rd CROWDED WEEK
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்
Next Attraction
THE TAMARIND SEED (Color)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15 & 9.45
RUSSIAN ROULETTE
Thrilling - Exciting - Demanding
(சில நாட்களுக்கு மட்டும்)

இதயம் கனியாகும்
118-வது வெற்றித் தினம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

ஸ்ரீதர் ஜெமினி—சரோஜாதேவி
(யாழ்ப்பாணம்) நாகேஷ் - விஜயநிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
பணமா பாசமா
3-6-77 முதல்
சிவாஜி கணேசனின் வைர நெஞ்சம்

தினசரி 4 காட்சிகள்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்) விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈட்ஸ்மன் கலர்)

"திருவருள்" புரியும் பக்திரசமான 4.வது வாரம்
தினசரி 4 காட்சிகள் ஏ.வி.எம்.ராஜன், இருபானந்தவாரியார்
ராஜா (யாழ்நகர்) போன்: 7180 நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின் திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு: பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

## பத்திராஜாவுக்கு 10—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

னையப்புடைக்க வேண்டும். அல்லது ரசிகன் கத்துவான்.

6. வில்லனை சகல கெட்ட குணங்களும் உள்ளவனாக காட்டுவதற்காக இடையிடையே சில காட்சிகள் (பொருத்தமில்லாவிடினும்) அமைக்கப்பட வேண்டும். அல்லது ரசிகன் கத்துவான்.

7. வசனங்கள் அதிகமாக எழுதத்தெரியாத -எழுதவிருப்பமில்லாத திரைக்கதை வசன கர்த்தாவை தேர்ந்தெடுத்து வீடாதீர்கள். ரசிகன் கத்துவான்.

8. பாட்டுகள் ஆண்-பெண் உடல் உறவு சம்பந்தமான கருத்துக்கள் கொண்டதாக இருந்தால் மட்டும் போதும். (சகோதரனும் சகோதரியும் சென்று பார்க்க முடியாததாக இருப்பினும் பரவாயில்லை) அல்லது ரசிகன் கத்துவான்.

9. கண்களுக்கு ரம்மியமான இயற்கைக்காட்சிகளைக் கொண்டே படத்தைத்தயாரிப்பதை விட்டுவிட வேண்டும். அல்லது ரசிகன் கத்துவான்.

10. பாத்திரங்கள் ஒவ்வொன்றும் நடிப்பது போலக் காட்டிக் கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் சொண்டைச் சுழித்து கண்களைப் பிதுக்கிக் காட்ட வேண்டும். அல்லது ரசிகன் கத்துவான்.

எமது ரசிகர்கள் தமிழுக்காக உயிரை விடுவார்கள் அது பேச்சுத்தமிழுக்காக அல்ல ஏட்டுத் தமிழுக்காக. "ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது" என்ற முதுமொழி ஒன்றும் தமிழில் உண்டு. கலைகளோ இலக்கியங்களோ எதுவானாலும் வாழ்க்கையோடு ஒட்டி வராதவைகளோடுதான் இவர்களுக்குத்தாங்கிக் கொள்ள முடியாத அபிமானம்.

மிகவும் பொறுமையுடன் இயக்குநர் பத்திராசா அவர்கள் இந்தப் பத்துப்புத்திமதிகளையும் ஏற்றுக்கொள்வாரெனில் எமது ரசிகர்களுக்கெல்லாம் ஏற்ற தமிழ்ப்படங்களைத் தயாரித்தளிக்க அவர்களால் நிச்சயமாக முடியும்.

ஒரு சினிமாப் படத்தினுடைய வெற்றி என்பது எதில் தங்கியிருக்கிறது? வெற்றியை எப்படி முடிவெடுத்துக் கொள்வது? இவைகள் கேள்விக்குரியவையே! பண வசூல்தான் வெற்றிக்கு அறிகுறி-முடிவான முடிவு என்கிறார்கள் சிலர். "பல திறப்பட்ட கருத்துடையவர்களின் நன்மதிப்பைப் பெறுதல்" என்ற ஒன்றுதான் வெற்றிக்கான முடிவு என்கிறார் வேறுசிலர். இந்தக்கருத்துக்கள் சரியென்றால் பரிசுகள் பெற்ற சினிமாப்படங்கள் (தமிழில் மிகச்சில) எந்தத் தரத்தில் பரிசுகளைப் பெற்றன பிற மொழியாளர்களாலும் பாராட்டப்பட்டன என்பது கேள்விக்குரிய ஒன்றாகும்.

தமிழ்ப்படங்களைப் பார்த்துச் சரிபிழை சொல்வதில் தென் இந்தியத் திரைப்பட ஆதிக்கத்துக்குட்பட்டுநிற்பவர்களாகிய நம்மவர்கள் அந்த ஆதிக்க இலக்கணத்திற்குட்பட்ட புதிய காற்றையும், கோமாளிகளையும், பொன்மணியோடு ஒப்பிட்டுப்பார்ப்பது சரியானதே!

பொன் மணியில் பிழைகள் என்பவை இல்லை என்று கூறுவது முட்டாள் தனமானமாகும்.

1. அவசியமெனப்படாத காட்சிகள் திட்டப்பட்டமை.

2. வசனங்களில் வரும் கேள்விகளுக்கும் பதில்களுக்கும் இடையே உள்ள இடைத்தூரம் நீண்டுவிட்டமை.

3. எடுக்கப்பட்ட கருப்பொருள் நன்கு விளக்கப்படாமை.

4. ஏற்றத்தாழ்வான சமூக வாழ்வுக்கு இலக்கணமாக இருக்கும் சம்பவம் பின்னல்கள் தவிர்க்கப்பட்டமை.

5. சரியான யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழ் சரிவரக் கடைப்பிடிக்கப்படாமை.

6. சிலர் நடிப்பது போலக் காட்டிக்கொண்டமை,

7. சமூக அமைப்பு முறையினால் எழுந்த சாதிமுறைக்கு முடிவு கட்டுவதற்கான திசை காட்டாமை.

8. பொருத்தமான முறையில் காட்சிகளைச் செவ்வனே தொடர்பு படுத்தாமை.

9. ஒலி அமைப்பில் சற்று நேரத் தவறுகளை விட்டமை.

10, இயக்குநருக்கு (பிறமொழிக்காரராக இருந்தமையால்) வசனங்களின் தார்ப்பரியங்களைச் சரிவர விளங்க வைக்காமை.

ஆகியவைகளைக் குறைகளாகக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

வெஸ்லி
(மாவிட்டபுரம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
இருவர் உள்ளம்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30
Ransom

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினி-அஞ்சலிதேவி
வீரக்கனல்

## தமிழ்—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யாதும் இருந்திருக்கலாம். இப்போது பிரச்னை அதுவல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணி உத்தியோக ரீதியாக நிறுத்தியுள்ள வேட்பாளர்களுக்கு மட்டுமே ஒவ்வொரு தமிழரும்தமது பொன்னான வாக்குகளை ஈந்து சுதந்திர தமிழ் ஈழம் அமைப்பதே தமது இறுதி முடிவு என்பதை அனைத்துலகிற்கும் பறைசாற்ற வேண்டும். இந்த வாய்ப்பைத் தவற விட்டால் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் அனர்த்தமே விளையும்.

முன்நடந்த தேர்தல்களில் தமிழன் கட்சி கட்டி நின்றதால் முகம் குப்புற வீழ்ந்தான். வீழ்ந்தப்பட்ட தமிழன் மீண்டும் எழுந்து உரிமை பெற நிமிர்ந்து நிற்க வேண்டுமென்றால் தமிழ் ஈழம் அமைப்பதொன்றே அதற்கு மாற்று மருந்து.

## இலாபம் பெற்றன

கொழும்பு, ஞாயிறு

பதினெட்டு கைத்தொழில் கூட்டு ஸ்தாபனங்கள் கடந்த ஆண்டு லாபமீட்டின என்று அறிவிக்கப்பட்டது.

## இராமநாதன் நுண்கலைக் கல்லூரி
## அனுமதிபெற்ற மாணவர்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கைப் பல்கலைக் கழக யாழ். வளாகத்தின் ஓர் அங்கமான இராமநாதன் நுண்கலைக் கல்லூரிக்கு இவ்வருடம் 64 மாணவர்கள், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், மிருதங்கம், வீணை, வயலின் ஆகியபிரிவுகளுக்கு அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். அனுமதிக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு: வாய்ப்பாட்டு: செல்விகள்: என். சித்திரா, எஸ். இந்திராணி, ஜெ, ஜெனதா, ரி.ஜெயந்தினி, எம்.ஜெயராணி, பி ஜெயரூபி, பி. கலாராணி, என். கமலகுமாரி, ரி. கமலநாயகி, கே. மகேஸ்வரி, கே. மல்லிகா, ஆர் மீனலோஜனி, எம். பரிமளம், கே. பராசக்தி பிறேமகுமாரி, பீ. றஜனி, ஜெ. ராதை, ஆர். ரோசனி. தேவபிரியம், ஆர் றஞ்சனி, எம். சத்தியராணி, கே. சிவநாயகி, ஆர். சூரியகலா, எஸ். ஸ்ரீரஞ்சனி, எஸ். சுகிர்தகலா, பி. சுவர்ணம்பிகை, எஸ். தேவராணி, எ. தியாகேஸ்வரி, எஸ். உருத்திராணி, என் வசந்தகுமாரி, எஸ். வசந்தமலர், என். வாசுகி. வி. விஜயலட்சுமி ஆர். யோகராணி, எஸ். விசுவலிங்கம், எம். ஏ. ஜெ. சின்னத்துரை, எல். பொன்னுத்துரை, ஈ. பரராஜசிங்கம், எம். வை. பிரான்சிஸ், கே. அருட்சோதி, கே. ஆர். கனகசபாபதி ஆர். சுந்தரலிங்கம்.

பரதநாட்டியம்: செல்விகள்: என். அரசரட்ணம், ரி. மீரகுமாரி, ஆர். சாமினி

மிருதங்கம்: வி. ஜம்புநாதன், கே. பரமானந்தம், ஜெ. சண்முகானந்தசர்மா.

வீணை: திருமதி: எஸ். பாலசுப்பிரமணியம், செல்விகள்: கே. சாந்தினி, எஸ். உசாநாயகி, எஸ். குமுதினி, செல்வன். ரி. தியாகேசன்.

வயலின்: செல்விகள்: ரி. அருணமதி, எல். எம். ஜேம்ஸ், கே. சி. கந்தையா, வி. லிங்கநாதபிள்ளை, எம். மன்சுகா, எ. சுசி, எஸ். தம்பிராஜா, ஆர். தெய்வீகசவுந்தரராணி, ரி. திலகவதியார், வி. விஜயராணி, எஸ். ஸ்கந்தராஜா. (கு)

## உறுதியுரை

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்றுமுன்தினம் தமிழர் கூட்டணி வேட்பாளர் 24 பேரும் அமையவிருக்கும் தமிழ் ஈழ மதச்சார்பற்ற சமதர்ம அரசுக்கு விசுவாசமாக உழைப்போமென உறுதியளித்து நியமனப்பத்திரத்தை கட்சிக்கு சமர்ப்பித்தனர்.

அவர்கள் தமது உறுதியுரையில், "எனது மனச்சாட்சிக்கமைய கட்சியின் கட்டுப்பாட்டுக்கு செயல் படுவேன் எனது ஊதியத்தில் ஒருபகுதியை விடுதலைக்கு அர்ப்பணிப்பேன்" என்றும் உறுதியளித்துள்ளார்கள். (கெ)

## கூட்டணி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்தொகுதியை கொடுக்குமாறு கூட்டணி நியமனக்குழுவினரை சந்தித்து வலியுறுத்தியது. ஆனால் எனக்கு யாழ்ப்பாணம் கிடைக்கவில்லை. நியமனக்குழுவினர் என்னை நேரில் அழைத்து வட்டுக்கோட்டையில் போட்டியிடுமாறு கூறினார்கள். அதனை நான் ஏற்றுக் கொண்டேன். கடைசியில், வட்டுக்கோட்டையும்கிடைக்கவில்லை இதுபற்றி நியமனக் குழுவினரைத்தான் நீங்கள் கேட்கவேண்டும்.

திரு. எஸ். ஸ்ரீநிவாசன், திரு. கே. மதிபாலசிங்கம் மற்றும் பலர் பேசினார்கள். (க)

யாழ். முற்றவெளிக்கூட்டம்

# தமிழர்களின் ஒற்றுமையில் தான் நமது சுதந்திரம் தங்கியுள்ளது

## செயல் அதிபர் 'அமிர்' பேச்சு

யாழ்ப்பாணம், திங்.

'தற்போது இயங்கிவரும்முஸ்லிம்கட்சிகள் அனைத்தும் சிங்களதேசிய இனத்தின் கட்சிகளே. இவர்களால் முஸ்லிம்கள் உரிமைபெறமுடியாது. நாம் நமது உரிமைகளைப்பெற ஒரேவழி, நமக்கென ஓர் கட்சியை நம் முஸ்லிம் இனத்தவரால் தோற்றுவிப்பதுதான்'.

யாழ் கோட்டை மைதானத்தில் நடந்த கூட்டணி பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய முஸ்லிம் ஐக்கிய முன்னணி பிரமுகரும், தமிழர் விடுதலைக் கூட்டணி சம்மாந்துறை வேட்பாளருமான சட்டத்தரணி ஜனுப் காசிம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் ஐ. தே. கட்சியின் முஸ்லிம் தலைவர்களோ அல்லது ஸ்ரீ ல. சு. க. முஸ்லிம் தலைவர்களோ, எமது இனத்துக்குச் சேவையாற்றும்படி முஸ்லிம் இனத்தவரால், சேர்ந்துஅனுப்பப்பட்டதல்ல. சிங்கள தேசிய இனத்தவரால். தீவிர இடதுசாரி இயக்கத்துக்கு போலியான தலைவர்கள் எமது அநீதிகளைத் தட்டிக்கேட்கத் தகுதியற்றவர்கள். எமது பாரம்பரியமான பூமிகள் பறிக்கப்படும்போதுதானே அல்லது மதசுதந்திரம் மறுக்கப்படும்போதோ, படுகொலைகள் ஏன் வந்தது என்று உரிமையோடு கேட்கவோ, தகுதியற்றவர்கள் இவர்கள். எமது இனத்தால் தேர்ந்தெடுக்கப்படின் இப்படியான அநீதிகளை நிச்சயமாகத் தட்டிக்கேட்க உரிமையுண்டு. அண்மையில் இங்கு வருகைதந்த கேணல் கடாபிகூட இந்த உண்மையைக் கேட்டிருந்தார். நீங்கள் சிறுபான்மையினராக வாழ்ந்தும், உங்கள் உரிமையைப் பேண இன்னொரு இனத்தால் ஆக்கப்பட்ட தலைவர்களைவிட உங்களால் ஒருகட்சியை ஸ்தாபியுங்கள் என்றார்.

'இன்று தமிழ்பேசும் தேசிய இனத்தின் ஒற்றுமையிலே அரசுகட்கு ஏறும் சிங்களஇனங்களே இரகசியமாகவோ அழைத்தோ பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றனஎனவே தேர்தலின் பின்னர் ஒரு ஒளிமயமான எதிர்காலம் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமுண்டு' என்றார்.

### மக்கீன் பேச்சு

'மூதூர் கூட்டணி வேட்பாளர் ஜனுப் மக்கீன் உரையாற்றும்போது 'கடந்தகாலங்களிலும்பார்க்க இன்று நாம் மிகவும் கஷ்டமான பாதையைச் சந்திக்கஇருக்கின்றோம். ஒரு தேசிய இனத்தின் பிரச்னைகளை இன்னொரு தேசியஇனம் பழிவாங்கி நடாத்துகின்றது. குறிப்பாக தமிழ், முஸ்லிம் பிரதேசங்கள் சூறையாடப்பட்டு அவர்களை இந்தநாட்டின் அனாதைகளாக்கிவிட்டுள்ளன. தனதுபூமியில் தான் சுயநிர்ணய உரிமையுடன் வாழத் தகுதியில்லாவிட்டால், நாம் வாழ்வதில் பயனில்லை. சேர்வில என்ற தொகுதியில் 55000 மக்களுக்கு 648 சதுர மைல் ஒதுக்கப்பட்டபோது 1,30,000 மக்கள்வாழும் மூதூருக்கு 390 ச. மைல் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் திட்டமிடப்பட்டு எமது பிதேசங்களை அவர்கள் சூறையாடுகின்றார்கள். எனவே நாமும் விழிப்படைந்து இத்தேசிய இனம் இன்னொரு தேசியஇனத்தால் அடக்கியாழ்வதை விடுத்து போராட முன்வந்துவிட்டோம்' என்றார்.

செயலதிபர் திரு அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது: 1952ன் பின்னர், நாம் இருகட்சிகளாக, இருமேடைகளாக, பிரச்சாரம் செய்துவந்துள்ளோம்: 1972ல் இந்த நாட்டு அரசியலில் சிங்கள தேசிய இனம், தமிழருக்கு இருந்த அற்ப சொற்ப சலுகைகளையும் பறித்து அவனை நிரந்தரஅடிமையாக்கியது. இதனால் 19 பிரதிநிதித்துவமுள்ள தமிழர்கள் 15 பேர் கூட்டணி என்ற அமைப்பில் இக்குடியரசு அமைப்பை எதிர்த்து போராட ஓரணியாக இணைந்தார்கள். இவ்ஒற்றுமைஇன்று நேற்று ஏற்படாமல் பல காலம் இனவிடுதலைக்கு போராடுவதற்கு இன்று 5 முஸ்லிம் பிரதிநிகளை தேர்தலில் நிறுத்தியுள்ளோம். தமிழனில் தாழ்த்தப்பட்டவன் என்றுஓர் இனம் இல்லையென உடுப்பிட்டியில் ஒரு சிறுபான்மையினரை நிறுத்தியுள்ளோம். நாம் வெற்றிபெற்றும் தமிழனின் அரசியல் உரிமை மறுக்கப்பட்ட ஓர் இனம் இல்லையென உடுப்பிட்டியில் நிரூபிப்பதே எமது வெற்றியின் முக்கிய பொறுப்பாகும். நாம் நமது இனத்திலுள்ள களைகளை அகற்றினால் தான் சுதந்திரம் பெறமுடியும வங்காளதேசத்தில் மக்கள் அவாமிலீக் கட்சிக்கு எப்படி பெரும்பான்மையாக வாக்களித்து ஒருவருடத்தில் சுதந்திரம் பெற்றார்களோ அதைப்போல உங்கள் ஒற்றுமையில் எமது சுதந்திரம் தங்கியுள்ளது.

### கவிஞர் காசி உரை

கவிஞர் காசிஆனந்தன் கூறியதாவது: நாம் சந்திக்கின்ற பொதுத் தேர்தல், தமிழினத்துக்கு இக்கட்டான பயங்கரமான சூழ்நிலையை தோற்றுவிக்கும் தேர்தல். ஐ.தே.க மீண்டும் பதவிக்கு வந்தால் நிச்சயமாக எமது இயக்கம் தடைசெய்யப்பட்டு சிறை வைக்கப்படலாம். இந்நிலையில் எமது தோழர்கள் போராட்டத்தில் இறங்கி ரத்தம்சிந்த தயாராக வேண்டும். தேசியப் பேரவை உறுப்பினர்கள் பதவியை துறக்கவேண்டும். இக்கட்டான தேர்தலை மிகவும் பக்குவமாக பயன் படுத்த கூட்டணிவேட்பாளர்கள் ஒருமித்து வாக்களித்து அகில உலகத்துக்கும எமது தீர்ப்பை காட்ட வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் நான் தேசியப் பேரவைக்கு சென்றாலும பெருமபகுதியை சிறையிலேயே கழிப்பேன்.

புத்தளம் கூட்டணி வேட்பாளர் ஜனுப் இலியாஸ் பேசுகையல் கூறியதாவது: புத்தளத்தில் நடைபெற்ற படுகொலைகள் பற்றி தேசிய அரசுப்பேரவையில் ஒரு கேள்வி தான் கேட்க எமது இயக்கத்துக்கு சேவையாற்ற சிங்கள இனத்தால் தேர்வான முஸ்லிம் தலைவர்களால் முடியாது போனது. ஆனால், தந்தை செல்வா ஒருவரினால் மட்டும் முடிந்ததானால். இந்த தேசிய இனமான முஸ்லிம் இனத்தை சுட்டுப் பொசுக்குவதை இன்னொரு முஸ்லிமால் முடியாது போனால் அவர்கள் இனத்துக்கு சேவையாற்றுவது வெறும் வாய்ப்பேச்சே, எமது மதச் சுதந்திரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன. இனம் அழிக்கப்பட்டு'வருகின்றன. இந்நிலையில் எமது இனத்தைக் காப்பாற்றுவதற்கு நாம் கூட்டணியுடன் சேர்ந்துபோரடுகிறோம்.

தொடர்ந்து பேசிய யாழ்ப்பாண தொகுதி வேட்பாளர் சட்டத்தரணி திரு. வே. யோகேஸ்வரன் கூறியதாவது: இன்று தமிழ்தேசிய இனம் அடிமையாய் வாழ்வதா அல்லது விடுதலை பெறுவதா? என்பதே கேள்வி. ஒரு சுயநிர்ணய உரிமையுடைய இனம்அதனது மொழி கலை, கலாச்சாரம், பண்பாடு, பொருளாதாரம் கல்வி வேலைவாய்ப்பு பறிக்கப்பட்டு ஆளப்படுகின்ற சிங்கள தேசிய இனத்தால் காலத்துக்கு காலம் ஆட்சி கட்டில் ஏறி அழிக்கப்படும்போது நாம் சும்மா இருக்க முடியாது எனவே நாம் விடுதலை பெறுவதற்கு சமதர்ம தமிழ் ஈழ அரசை நிறுவுவதற்கு உங்கள் அங்கீகாரத்தை நாடி வந்திருக்கின்றோம். நீங்கள்செய்யவேண்டியது எம்மைப்பலப்படுத்துங்கள். நானும் நீங்களும, போராடுவோம். இது எமக்கு விடுதலையைத் தேடித்தரும்.

வட்டுக்கோட்டை கூட்டணி அபேட்சகர் திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில் கூறியதாவது:

'எமது இனம் அடிமைப்பட்டு இருக்கும்போது சிங்கள அரசு பலசேவைகளை செய்துள்ளதாக, பாடசாலைகள் கட்டித் தருவதாக நியமனங்கள் வழங்கியுள்ளதாக கூறுவது எம்மை ஏமாற்றுவதற்கேயாகும். அவர்கள் கட்டித் தந்த பாடசாலைகளில் எமது குழந்தைகள் கற்று உயர்கல்வியில் அவர்கள் தரப்படுத்தலினால் பின்தள்ளினால் அதனால் என்ன பயன்? அக்கல்லூரிகளால் எமது இனம் அடக்கப்படுவதைத் தான் காண முடியும. எனவே நாம விடுதலை பெறவேண்டும அதற்கு தமிழ் ஈழம நிறுவ போராடுவதே எமது குறிக்கோள் என்றார்.

முன்னாள் கிளிநொச்சி எம.பி சட்டத்தரணி திரு. ஆனந்தசங்கரி பேசுகையில் கூறியதாவது:

"இன்று எம இயக்கத்தில் சிலர் தேர்தல் ஆசை கொண்டு பல காலம ஒதுங்கி சுகவாழ்வில் வாழ்ந்து தேர்தலுக்கு வந்திருக்கிறார்கள். இன்று நெருக்கடியான தேர்தலாக பட்டினி, பஞ்சம, உடலுழைப்பு உள்ள இயக்கத் தொண்டர்களே இன்று தேர்தலில் கூட்டணியால் நிறுத்தப்பட்டுள்ளவர்கள். அவர்களுடன் உங்கள் எதிர்காலத்தை செருசான வாழ்வை சீரழிக்காமல் சற்றுவிலல் நில்லுங்கள். உங்களை மக்கள் நன்கறிந்துவிட்டதால் விடுதலை இயக்கத்துடன் போட்டியிட்டு கௌரவத்தை இழக்காமல் ஒதுங்கியிருங்கள்.

பட்டிருப்பு வேட்பாளர் திரு. கணேசலிங்கம கூறியதாவது: 1971-ம ஆண்டில் குடிசனமதிப்பின்படி பட்டிருப்பில் 2530 சிங்கள மக்கள் இருப்பதாகக்கூறப்படுகின்றது. இன்று இது கூடியிருக்கின்றது.

இவர்கள் பலவந்தமாக எமது பகுதியில் குடியிருத்தி எமது நிலத்தை சூறையாடவுள்ளது. இந்நிலையொழியவே எமது போராட்டம் தொடரப் போகின்றது.

முன்னாள் மட்டுநகர் முதலாவது எம். பி. திரு. செ.இராஜதுரை பேசும்போது, தந்தை செல்வாகாட்டியஒற்றுமையை சிதறவிடாது என்றும் வளமுள்ள தமிழகத்தை நிறுவ எல்லோரும் முயல்வதே இத்தேர்தலின் நோக்கமாகுமென்று கூறினார்.

பண்டிதர் கா. போ. இரத்தினம் உரையாற்றுகையில் பிரிவினை பேசுகின்ற கூட்டணியுடன் எவ்வித தொடர்பும வைக்கமாட்டோமென கூறிய சிறிமா அம்மையாரே இன்று பேச்சுவார்த்தைக்கு அழைத்தாரென்றால் அதன் அர்த்தம நமது ஒற்றுமைதான் என்றார்.

அவர் தொடர்ந்துகூறியதாவது: இப்படியாக நமது ஒற்றுமையினால் எமது எதிர்ப்பைத் தாங்காமல், எமது சுயநிர்ணய உரிமைகளைத்தரவும இணங்கலாம. ஆனால் நாம தமிழ் ஈழம் காணுமவரை ஓயாது போராடுவோம.

கல்குடா அபேட்சகர் திரு. சமபந்தமூர்த்தி பேசுகையில் கூறியதாவது: தமிழகத்தை விடுதலைபெறவைக்க கிழக்கிலங்கை மக்கள் குறைந்தவர்களல்ல, புரட்சி ஒன்றுஉருவாகுமானால் அது கிழக்கிலேதான் முதல்வெடிக்கும. அங்குதான் எமது இனம் தாங்கொணாக் கொடுமைகளை தாங்கமுடியாமல் தத்தளிக்கின்றது. இனவிடுதலைக்கு நாம் எம்மை தயார் செய்துவிட்டோம.

சேர்வில அபேட்சகர் ஜனுப் ஏ. ரகுமான் பேசுகையில் அகில உலகிலும் தமிழனுக்கு ஒருநாடு கிடையாது. அதுஇலங்கையில் தான் சாத்தியப்படும் நாம்சேர்விலதொகுதியில் போட்டியிடாவிட்டால் அமபாறையில் 96·5 வீதம சிங்களவராகமாறி அப்பிரதேசத்தை பறிகொடுத்தோமோ அதைப்போல இதையும இழக்க நேரிடும. (கெ)

---

## தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் கூட்டணிஅபேட்சகர்களை பெரும்பான்மைமேலதிக வாக்குகளால் வெற்றிபெற செய்யவேண்டும்.

வட்டு மாநாட்டில் 'தமிழன் வாழ வேண்டுமானால், தன்னைத்தானே ஆழவேண்டும். என்ற தீர்மானத்தை எடுத்தோம்.

தமிழ் ஈழம் அமைப்பது தனே எங்கள் இறுதி இலட்சியம் இதிலிருந்து ஒரு அணுக்கூட அசையமாட்டோம் தமிழினத்தின் எதிர்காலம் மலர தமிழ் இளைஞர்கள் ஒன்று திரண்டு கூட்டணி அபேட்சகர்களுக்கு முழு ஆதரவையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

---

## அஞ்சல்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

செல்லையா குமாரசூரியர் திறந்து வைப்பார்.

புதன்கிழமை மாலை வட்டுக்கோட்டைத் தொகுதிவேட்பாளர் திரு. வை. இராஜசுந்தரம் தலைமையில் நடைபெறும். இத்திறப்புவிழாவினைத்தொடர்ந்து பொதுக் கூட்டமும் இடம் பெறும். (கா)

......

## நாளை ஆஜர்செய்யப்படுவர்

யாழ்ப்பாணம், திங்

சங்கானை கிளப் தாக்குதல் வழக்குத் தொடர்பான எதிரிகள் நாளை ரிமாண்டில் இருந்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர். இவர்கள் மீதான தண்டனை நாளை விதிக்கப்படும். (உ)

---


உ

# திருமண அழைப்பு

மணமகன்: திருவளர் செல்வன்
**சாந்தகுமாரன்**

மணமகள்: திருவளர் செல்வி
**சுப்புலட்சுமி**

இடம்: மணமகளில்லம் (மட்டுவில் வடக்கு)
திகதி: பிங்கள ஆண்டு வைகாசி மீ 19-ம் நாள் புதன்கிழமை (1-6-1977)
காலம்: காலை 9-00 மணி

உறவினர்களையும் நண்பர்களையும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கொண்டாட்டம் மணமகன் இல்லத்தில் மூன்று நாட்கள் வரை நடைபெறும்.

| | |
|---|---|
| ஆர். வி. கந்தசாமிபத்தரும் பாரியாரும் | வே. மூத்துபத்தரும் பாரியாரும் |
| (மணமகனின் பெற்றோர்) | (மணமகளின் பெற்றோர்) |
| நாச்சிமார் கோவிலடி, 555/3, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். | மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. |

6315

# திருமண அழைப்பு

எதிர்வரும் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் திகதி புதன்கிழமை காலை 9-15 முதல் 10-15க்கு இடையில்

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

| | |
|---|---|
| எனது மகன் | எனது மகள் |
| டாக்டர் திருக்[illegible] | செல்வி. அருந்ததி, விரிவுரையாளர், பல்கலைக்கழக யாழ். வளாகம் |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

நடைபெறும் திருமணத்திற்கு வருகை தரும்படி உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| திரு. கே. சுப்பையா | டாக்டர் எஸ். சபாரத்தினம், திருமதி எஸ். சபாரத்தினம் |
| (இளைப்பாறிய ஓவசியர்) | |
| கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை. | 2, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். |

6314


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O; Box 49, Jaffna; Telegram: Eelanaadu Telephone 389, Registered as a Newspaper in Sri Lanka.